ஓம்

பிரசண்ட விகடன்

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்"

மலர் 4. சென்னை, 1936௵ ஏப்ரல்௴ 15௳ இதழ் 2.

உள்ளுறை.

	விஷயம்.	பக்கம்.
1.	இவ்வளவு தடுமாற்றமா?	2
2.	காலச் சக்கரம்	4
3.	ஐரோப்பாவில் ஹிட்லர் தடபுடல்	6
4.	சீமாட்டி கார்த்தியாயினி (தொடர் கதை)	14
5.	மாய மோதிரம்	17
6.	கபார்	22
7.	கந்தன்	25
8.	காதலின் கொடுமை	30
9.	சூழ்ச்சி பலித்தது	36
10.	அணிலும் சிவனும் (பாட்டு)	40
11.	போலித் துறவி	42
12.	"மல் யுத்தம்"	46
13.	தங்கையின் சந்தேகம்	47
14.	ஆடல் பாடல்	49

"விகடனி"ல் வரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே. தனிப்பட்டவர்களைக் குறிப்பவை இல்லை.

இவ்வளவு தடுமாற்றமா?

:(o):

காங்கிரஸ் காரியக் கமிட்டியார் அலகாபாத்தில் இரண்டு நாள் கூடி ஆலோசனை செய்து விவாதித்து ஒரு வழ வழத்த முடிவைச் செய்திருக்கின்றனர். "மந்திரி பதவிகளை ஒப்புக் கொள்ளுவதா வேண்டாமா என்பதை இப்பொழுது தீர்மானிக்க வேண்டியதில்லை. இன்னொரு சமயம்பார்த்துக்கொள்ளலாம்" என்று விட்டுவிட்டனர். அதாவது மாகாண காங்கிரஸ் கமிட்டிகளின் ஆலோசனைகளைக் கேட்டுக்கொண்டு இவ் விஷயத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் விசேஷக் கூட்டம் ஒன்றில் பின்னால் முடிவு செய்ய வேண்டும் எனத் தீர்மானித்திருக்கின்றனர். இந்த விசேஷக் கூட்டம் வரப் போகும் பொதுத் தேர்தலுக்கு முன்னதாகவோ பின்னதாகவோ நடைபெறும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர். இத்தகைய முடிவு ஏற்படும் என்று சிலர் எதிர்பார்க்கவில்லை. இதற்கு முன்னர் சென்னையிலும், டில்லியிலும் கூடிய கூட்டங்களில் "உத்தியோகம் ஏற்கும் விஷயத்தை முடிவு செய்ய இப்பொழுது என்ன அவசரம்? எல்லாம் லக்ஷ்மணபுரி காங்கிரஸில் பார்த்துக் கொள்ளலாம்" என்று தீர்மானித்ததும் நேயர்கட்கு நினைவிருக்கலாம். காங்கிரஸ் காரியக் கமிட்டியினர் இவ் விஷயத்தில் தடுமாற்ற புத்தியைக் காட்டிக்கொண்டு வருவது நாட்டில் பலவித ஐயப்பாடுகளுக்கு இடமுண்டாக்கிக் கொண்டிருக்கிறது. சத்தியத்தையே அடிப்படை தருமமாகக் கொண்டொழுகும் காங்கிரஸ் எந்த விஷயத்தையும் "உண்டு—இல்லை" என்ற முறையில் தெளிவாக நடந்து வழி காட்டாமல் இருப்பது வருந்தத்தக்கது. வகுப்புப் பிரச்சினை விஷயத்திலும் காங்கிரஸ் உறுதியற்ற நடுநிலை முடிவைச் செய்ததன் மூலம் நகைப்பிற்கிடமேற்பட்டுக் கொண்டிருப்பதையும் இச்சமயத்தில் நினைவு கூர்தல் பொருந்தும்.

காங்கிரஸில் பண்டித ஜவஹர்லால் போன்ற தீவிரவாதிகள் உத்தியோகம் ஏற்பதை வெறுப்பதாலும் மற்றும் பலர் உத்தியோகம் ஏற்பதை விரும்புவதாலும் இந்த இருசாராரையும் திருப்தி செய்யக் காரியக் கமிட்டியார் மேற்கண்டவாறு முடிவு செய்தனர் என்று சொல்லப்படுகிறது. எதிலும் சமாசமாகப் போதல் நல்லதாயினும் சில சமயங்களில் அச் சமாசம் பெருத்த அசம்பாவிதங்களையும் உண்டாக்கி விடுகிறது. காரியக் கமிட்டியார் இம் முக்கிய விஷயத்தை ஒத்தி வைத்தது பெருந் தவறு. பின்னால் இதனால் விளையும் விபரீதங்கள் அனந்தம்.

பண்டித ஜவஹர்லாலைத் திருப்திப் படுத்த வேண்டி இவ்வாறு நிர்ணயிக்கப் பட்டதாயின் இதை புத்திசாலித்தனமான முடிவு என்று சொல்ல முடியாது. தலைவரின் அபிப்பிராயம் வேறாக இருக்கலாம். ஆனால் நாட்டு நிலைமையையும் எதிர்கால அரசியல் நிலைமையையும் உத்தேசித்து ஒரு தீர்க்கமான முடிவு செய்து வழி காட்டவே காங்கிரஸ் கடமைப்பட்டிருக்கிறது. பண்டித ஜவஹர்லால் நேருவுக்குச் சங்கடம் ஏற்படக்கூடாது என்பது பெரிதா, நாட்டுநலம் பெரிதா? தனிப்பட்டவர்கள் எவ்வளவு மதிப்பு வாய்ந்தவர்களாயிருந்தபோதிலும் பொதுநலத்தை உத்தேசித்து அதற்கான முடிவைச் செய்வதே அறிவுடைமை யாகும். தீவிரவாதியான பண்டிதரின் அபிப்பிராயம் எப்படி இருந்தபோதிலும் காங்கிரஸ் கட்டளைக்கு முரணாக அவர் நடந்து கொள்ளமாட்டார் என்பதே "விகட"னது அபிப்பிராயம்.

பதவி ஏற்கும் விஷயத்தைப்பற்றி மாகாணக் கமிட்டிகள் அபிப்பிராயம் தெரிவிக்க வேண்டுமாம். அந்த அபிப்பிராயங்களை அகில இந்திய காங்கிரஸ்கமிட்டி ஒப்புக்கொள்ள வேண்டுமாம். பிறகு பொதுத் தேர்தலுக்கு முன்னாகவோ பின்னாகவோ பதவி ஏற்கும் விஷயம் முடிவு செய்யப்படுமாம். எதற்காக ஊசலாடுவது என்று விளங்கவில்லையே! எப்பொழுது காங்கிரஸ் சட்டமறுப்பை நிறுத்திவிட்டுச் சட்டசபைப் பிரவேசத்தை ஒப்புக்கொண்டதோ அப்பொழுதே மந்திரி பதவி ஏற்பு விஷயமும் அதில் தொக்கிநிற்கிறது என்றுதான் அர்த்தம். இதைப்பற்றி முன்னரே முடிவு செய்திருக்கவேண்டும். மந்திரி பதவிகளை ஏற்பது என்று வெளிப்படையாய் முடிவு செய்தால் எங்கே பொது ஜனங்களிடையே செல்வாக்குக் குறைந்துவிடுமோ என்ற அச்சமே இவ்வித நிலையற்ற மனப்பான்மைக்குக் காரணமாயிருந்து வந்திருக்கிறது. இந்தப் பலவீன மனப்பான்மை காங்கிரஸுக்கு வேண்டியதே இல்லை. உண்மையைச் சொல்லுவதால் ஏற்படும் பலாபலன்களை அநுபவிக்கச் சித்தமாக இருக்கவேண்டியது காங்கிரஸ்காரரின் கடமை. தேர்தல்களில் வெற்றி தோல்விகளைக் குறித்துக் கவலைப் படக்கூடாது. பதவி ஏற்கும் பிரச்சினையைத் தீர்த்துவைக்க இன்னும் காலம் வரவில்லை—அதற்குத் தக்க சமயம் வரும் என்று இதுகாறும் சொல்லிக்கொண்டிருந்தது ஒருவாறு சரியே. அதற்குரிய காலம் வந்தபோதும் சஞ்சலபுத்தியைக் காட்டிக் கொண்டிருப்பது இழிவாகும். எதிரிகள் கைகொட்டிச் சிரித்து ஏளனம் செய்யும்படியாகக் காங்கிரஸ் காரியக் கமிட்டியினர் ஏன் நடந்துகொள்ளவேண்டும்? "ஒரு வருஷமாக எல்லாருடைய மனங்களையும் அலைத்துவந்த ஒரு விஷயத்தில் திட்டமான ஒரு முடிவு கூறாமல் ஒத்திவைத்துக்கொண்டு போகும் முறை சரியன்று. நாட்டின் போக்கை ஒட்டிச் சட்ட சபைகளுக்குப் போகையில் பதவி வகிப்பதும் முக்கியம். இன்றேல் பூரண சுயேச்சைக் கொள்கையை ஒப்புக்கொண்டு ஒருவழியாகக் கடைசிவரை பிரிட்டிஷாரோடு போராடித் தீர்த்துவிடுவது என்று முடிவு செய்யவேண்டும். அதுவுமின்றி, இதுவுமின்றி சட்டசபைக்குச் சென்று, ராஜ விசுவாசப் பிரமாணமும் செய்துவிட்டு உத்தியோகம் ஏற்க மறுப்பதென்றால்—அது சரியாக இல்லை" என்று ஸ்ரீமான் சிந்தாமணி கூறுவதில் என்ன தவறு இருக்கிறது?

காங்கிரஸ் சட்ட மறுப்பை நிறுத்திச் சட்டசபைப் பிரவேசத்தில் கருத்தைச் செலுத்தியதால் அதைப் பூரணமாக நிறைவேற்றவேண்டும். பிற்போக்காளர் பதவி வகித்திருந்ததற்கும், இவர்கள் பதவி வகித்து நடத்துவதற்கும் என்ன வித்தியாசம் என்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்தவேண்டும். இன்றேல் வெளியில் வந்து போராட்டத்தில் இறங்க வேண்டும். அங்கொரு காலும் இங்கொரு காலும் வைத்திருப்பதால் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது. நாட்டு மக்கள் எல்லோரும் காங்கிரஸ் போக்கைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகின்றனர். எனவே காங்கிரஸ் நேர்மை கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்பது "விகட"னது ஆசை.

லக்ஷ்மணபுரி காங்கிரஸ் நடவடிக்கைகளைப் பற்றியும், சொற்பொழிவுகளைப் பற்றியும், தீர்மானங்களைப் பற்றியும் அடுத்த "விகடன்" இதழில் விரிவாக வெளிவரும். வாழ்க காங்கிரஸ்!

காலச்சக்கரம்

தாய்நாட்டுக்கு வரவுந் தடையா?

இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் ஏற்பட்ட பிறகு, முதன் முதலாகச் சுதந்தரத்துக்கு விதை போடப்பட்டது வங்காளத்தில்தான் என்பது தாய் நாட்டுச் சரித்திரத்தை யூன்றிக் கவனித்து வருபவர்களுக்கு நன்கு விளங்கும். அதனாலேயே, பிரிட்டிஷ் சர்க்காருக்குஞ் சரி, இந்திய சர்க்காருக்கும் சரி அம்மாகாணத்தின் மீது எப்போதும் கவனம் அதிகம். அங்கு சர்க்கார் கண்களுக்கு மற்றவர்களை விட மிகவும் பயங்கர புருஷர்களாய் தோன்றுபவர்கள் இருவர். அவர்கள்தான் ஸ்ரீஜத் சுபாஷ் சந்திர போஸ், ஸ்ரீஜத் சரத் சந்திர போஸ் ஆகியவர்களாவர். அவர்கள் சில வருடங்களுக்குமுன் ஒருவர் பின் ஒருவராய்க் கைது செய்யப்பட்டு விசாரணையின்றிச் சிறைவைக்கப்பட்டனர். இவர்கள் காலவரையறையின்றி விசாரணையின்றிச் சிறை வைக்கப்பட்டிருப்பதைப் பற்றி இந்தியா சட்ட சபையிலும், மாகாண சட்டசபைகளிலும் கேள்வி கேட்கப்பட்டது. சில வருடங்களுக்குமுன் உடல் நலக்குறைவு காரணமாக, இளஞ் சிங்கம் சுபாஷ் சந்திர போஸ் மேனாட்டுக்கு அனுப்பப் பட்டார். வெளிநாடுகளுக்குப் போயும் அவர் மீதிருந்த தடை நீங்கவில்லை. அவரது தாய் இறந்தபோதும், தாய்க்குரிய ஈமக்கடன் முடிந்ததும் உடனே வெளிநாட்டுக்குத் திரும்பிப் போய்விட வேண்டுமென்ற நிபந்தனையோடு சர்க்கார் அனுமதி யளித்தபிறகே அவர் இந்தியாவுக்கு வரவேண்டி யிருந்தது. இவ்வித நிலைமையில் எவ்வளவு நாட்கள்தான் சுதந்தர உணர்ச்சி மிக்க வீர புருஷன் தாய் நாட்டை விட்டு வெளி நாட்டில் இருக்க முடியும்? எனவே, சுபாஷ் போஸ் தமக்குச் சஸ்திர சிகிச்சையெல்லாம் ஒருவாறு முடிந்ததும் தாய் நாடு திரும்ப விருப்பங் கொண்டார். இதையறிந்ததும், சர்க்கார் அவர் இந்தியாவுக்கு வந்தால் கைது செய்யப்படுவார் என்று பயமுறுத்தினர். வியன்னாவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் வாயிலாகவும் இத்தகவலை அவருக்கு அறியப்படுத்தினர். தாம் பிறந்து வளர்ந்த தாய் நாட்டுக்கு ஒருவர் வருவதற்குக் கூடத் தடையா! இது பிரிட்டிஷ் இந்திய சர்க்காரின் கண்ணியத்துக்குத் தகுதியானதாகுமா?

* * *

ஸ்ரீஜத் சுபாஷ் போஸ் கைதி

இவ் விஷயம் சம்பந்தமாக இந்தியா சட்ட சபையிலும், பார்லிமெண்டிலுங் கேள்வி கேட்கப் பட்டது. சர்க்கார் தரப்பில் வழவழப்பான பதிலே கிடைத்தது. சர்க்காரின் இவ்வித தடைகளுக்கெல்லாமா தேசிய வீர கேசரி சுபாஷ் பாபு அஞ்சுபவர்! உடனே அவர் இந்தியாவுக்குப் புறப்பட்டு விட்டார். அவரது ஐரோப்பிய, இந்திய நண்பர்கள் கூட, இச்சமயம் சர்க்கார் உத்தரவை மீற வேண்டாமென்றும், அதனால் சிறைவாச மேற்பட்டால் பூரண குணமடையா திருக்கும் உடல் நலம் மீண்டும் கெடுமென்றும் வற்புறுத்திக் கூறினர். அயல் நாட்டில் சுதந்தரத்தோடிருப்பதை விட தாய் நாட்டில் சிறைப்பட்டிருப்பது மேலானது என்பது

அவர் கருத்து. "என் சொந்த நலன்களை, தேச நலன்களுக்காகவே பார்த்து இந்தியாவுக்குத் திரும்புவதென்று நான் முடிவு கட்டி விட்டேன்........................ ......இந்தியாவில் என் நாட்டாருடன் இருப்பது தான் இப்போது என் கடமை" என்று சுபாஷ் பாபு பாட்கஸ்டனிலிருந்து அனுப்பிய கடிதத்திலிருந்து அவரது மனநிலை நன்கு விளங்குகிறது. அவரது தீர்மானத்தின்படியே அவர் 8-ந் தேதி காலை 10-20 மணிக்குப் பம்பாய் அபலோ பந்தரில் வந்திறங்கினார். உடனே அதிகாரிகள் 1818-ம் வருஷத்திய 3-வது ரெகுலேஷன்படி கைது செய்தனர். இப்போது அவரைக் கைது செய்வதற்குச் சர்க்காருக்கு என்ன அவசியம் நேரிட்டதென்று தான் விகடனுக்கு விளங்கவில்லை. அவர் மீது ஏற்பட்டிருக்கும் வெறும் சந்தேகமே சர்க்காருடைய இவ்வித அர்த்தமற்ற நடவடிக்கைக்குக் காரணமென்று தெரிகிறது. புதிய அரசியல் சீர்திருத்தம் அமுலுக்கு வரப் போகும் இச் சமயத்தில், இந்திய சர்க்கார் இவ்விதமாக நடந்து கொள்வது, ஸ்ரீசுபாஷ் பாபு கூறுகிறபடி, புதிய அரசியலின் தன்மை இத்தகையதென வெளியாவதற்கு ஏதுவாகிறது.

* * *

இதுவன்றோ கொடை!

இந்தியத் தாய்க்குப் பெருமையளித்த பெரியார்களில் கவியரசர் ரவீந்திரநாத தாகூர் முக்கியமானவர். அவர் "சாந்தி நிகேதனம்" என்னுமிடத்தில் 'விஸ்வ பாரதி' என்னும் தேசிய கல்வி ஸ்தாபனத்தை நடத்தி வருவது பெரும்பாலார்க்குத் தெரிந்த விஷயம். சில வருஷங்களாக அந்த ஸ்தாபனத்தின் பொருளாதாரநிலை திருப்திகரமாக இல்லாதிருந்து வருகிறது. இதனால் 60,000 ரூபாய் வரை, அந்த ஸ்தாபனத்துக்குக் கடன் ஏற்பட்டு விட்டது. இது கவீந்திருக்குப் பெருங்கவலையையுண்டுபண்ணி வந்தது. விஸ்வபாரதிக்கு நிதி திரட்டுவதற்காகவே அவரது உடல்நலமின்மையையும் பொருட்படுத்தாது அவர் பல இடங்களுக்குஞ் சுற்றுப் பிரயாணஞ் செய்து வருகிறார். இந் நிலைமையை நன்கு உணர்ந்த தயாளகுணம் படைத்த யாரோ சிலர் 60,000 ரூபாயை பேர் ஊர் எதையுங் குறிப்பிடாது நன்கொடையாக கவி ரவீந்திரருக்கு அனுப்பியிருக்கிறார்கள். இச்செய்தி கவியரசர் வெளியிட்டிருக்கும் அறிக்கையிலிருந்து தெரிகிறது. இது அவரும், சாந்தி நிகேதன வாஸிகளும் ஒன்று சேர்ந்து செய்துகொண்ட பிரார்த்தனையை ஏற்று கடவுள் அதற்குப் பதிலளித்திருப்பதாக அவர் கருதுகிறார். கடவுள் கிருபையாலேயே இந்த நன்கொடை கிடைத்ததாக இருப்பினும், இது யார் வாயிலாக வந்ததோ, அவர்களுடைய தாராள மனப்போக்கை பாராட்டியே தீர வேண்டும். பெரும்பாலும் நன்கொடையளிக்க முன் வருவோர் தாங்கள் சிறு தொகை யளிப்பதாக இருந்தாலும், தங்கள் பெயர் விளம்பரப் படுத்தப்பட்டு பிரபலமடையவேண்டுமென்ற நோக்கத்தோடேயே மிகவும் ஆடம்பரத்தோடு தருகின்றனர். அப்படியிருக்க, இவ்வளவு பெரிய தொகையை 'விஸ்வ பாரதி'க்கு அளிக்க முன் வந்தவர்கள் தாங்கள் யாரென்பதையே குறிப்பிடாது ரவீந்திரர் தாய் நாட்டுக்குச் செய்துவருஞ் சேவையைப் பாராட்டி, மேலும் அவரது சேவை நாட்டுக்கு மிக அவசியமாக இருப்பதால், சுற்றுப் பிரயாணத்தை நிறுத்தி அவருடைய உடல் நலத்தைக் கவனித்துக் கொள்ளும்படியும் பிரார்த்தித்து 60,000 ரூபாயை அனுப்பியிருக்கிறார்களென்றால், அவர்களது அரிய செய்கையைப் பொன்னெழுத்துக்களி லன்றோ பொறித்து வைக்கவேண்டும்? இதுவன்றோ கொடை!

ஐரோப்பாவில் ஹிட்லர் தடபுடல்

ஜெர்மனி சர்வாதிகாரியான ஹிட்லர் ஒன்றன் பின் ஒன்றாக மூன்று வெடி குண்டுகளை வீசினார். அவற்றுள் இரண்டு வெடி குண்டுகள் மிகுந்த சப்தம் செய்தன. அதிக அழிவையும் செய்தன. இனி மூன்றாவது குண்டு வெடிக்குமா? வெடித்தால் அந்தச் சப்தம் எப்படி இருக்கும்? எவ்வளவு அழிவை உண்டாக்கும்? இவைகளை நிர்ணயிக்க வேண்டும்.

அபேதவாதம் அல்லது சமதர்ம வாதத்தின் தந்தையான கார்ல் மார்க்ஸ் பிறந்து வளர்ந்தது ஜெர்மனி. அவரது காலத்தில் அந்த நாடு எந்த நிலையில் இருந்தாலும் பிற்காலத்தில் மார்க்ஸ் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகத்துவ ஆட்சி முறை அங்கே நடைபெற்று வந்தது. இதற்குக் காலஞ்சென்ற தலைவர் வான் ஹிண்டன்பர்க் பெரிதும் ஆதரவு நல்கினார். ஐரோப்பியப் பெரும் போருக்குப் பின்னர் மேலை நாடுகளில் பல துன்பங்கள் நேரிட்டன. ஜெர்மனியில் வறுமைக் கொடுமை வருணனைக்கு அடங்காது. இதற்கொரு விமோசனம் வேண்டுமே என்று ஜெர்மனி மக்கள் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தனர். இச்சமயத்தில் தான் ஹிட்லர் கிளம்பினார். வறுமைக் கொடுமைகளையும் துன்பங்களையும் அநுபவித்துக் கொண்டிருக்கும் வாலிபர்களைத் திரட்டினார். தம்முடைய வாலிப கோஷ்டியாருக்குப் "புயற் படையினர்" என்ற பெயர் சூட்டினார். நகரங்கள் தோறும், கிராமங்கள் தோறும் அலைந்து திரிந்து தமது படைகளைத் திரட்டிப் பலப்படுத்தினார். ஹிட்லர் கக்ஷி நாஜிக் கக்ஷி என்பதை ஜெர்மனி உணர்ந்து கொண்டது.

தேர்தல் வந்தது. நாஜிக் கக்ஷியினரில் பலர் அபேக்ஷகர்கள். இவர்கள் சார்பில் புயற்படையினர் பிரசாரம் செய்தனர். இந்தப் பிரசாரத்தின் பயனாக நாஜிகளில் பலபேர் ரீச் சபையில் அங்கம் வகிக்கலானார்கள். அப்போது எல்லாரும் இவர்களைப் பற்றி அதிகமாக அறிய மாட்டார்கள்.

* * *

பர்லின் நகரில் என்று மில்லாக் காட்சி. இருபதினாயிரம் பேர். போர்க்கீதங்களைப் பாடிக் கொண்டு உற்சாகமாக ஒரு மைதானத்தில் வந்து நின்றனர். நாஜிகளுக்கு ஜே! ஹிட்லருக்கு ஜே! என்ற ஜே முழக்கம். எதிரில் இருந்த பெரிய கட்டடத்தின் மேல்மாடியிலிருந்து வான் ஹிண்டன் பர்க் இந்த ஆர்ப்பாட்டங்களைக் கவனிக்கலானார். இந்தக் கூட்டத்தில் நடு நாயகமாய் விளங்கும் ஹிட்லர் முகத்தைக் கண்டார். உடனே ஹிட்லர் அங்கிருந்த மேடை மீது ஏறினார். ஜெயகோஷம் வான முகடு முட்டியது.

“ஜெர்மனி அவமானங்களுக்கிடையில் தலை குனிந்து கொண்டு இன்னும் எத்தனை நாளைக்கு வாழ வேண்டும்? நமது நாடு தனது கௌரவத்தைத் தானே நிலைநிறுத்த வேண்டும். பசி—தாகங்களால் இந் நாடு ஈனநிலை அடைந்து கொண்டிருக்கிறது. நாம் நமது வீட்டை ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும். பிற்குதான் வெளி விவகாரங்களைக் கவனிக்க முடியும். சமதருமத் தத்துவத்தை ஆதாரமாகக் கொண்ட அரசாங்க முறை நமக்கு உணவு அளிக்க வில்லை. கௌரவம் கொடுக்கவில்லை. நம்மை அடிமைகளாகவும், நடைப் பிணங்களாகவும் செய்து விட்டது. நாட்டுக்காக அவசியமானால் என் உயிரையும் தியாகம் செய்யச் சித்தமாய் இருக்கிறேன். நமக்கு இந்த ஜனநாயகத்துவ சமதரும முறைகள் வேண்டாம்.”

இது ஹிட்லர் சொற்பொழிவு. இந்தச் சொற்பொழிவை ஆமோதித்து ஆதரிக்கும் முறையில் இருபதினாயிரம் பேரும் வானமுகடு கிழிய ஜெய முழக்கம் செய்தனர்.

இது ஒரு பிரமாண்டமான காட்சி. எத்தகைய கோழைக்கும் துணிச்சலைக் கொடுக்கும் காட்சி. கூட்டம் அப்படியே மனம் குளிர்ந்து உருகி விட்டது. ஹிட்லர் சொற்பொழிவு நின்றதும் மழை பொழிந்து ஓய்ந்தது போலிருந்தது. நாஜிக் கக்ஷிக்கு இவ்வளவு பலமா என்று பர்லின் நகரவாசிகள் பேசிக்கொண்டனர்.

நாஜிகளின் புகழ் பரந்தது. மறுபடியும் தேர்தலுக்கு ஏற்பாடு செய்வித்தனர். சமர்த்தர்களான புயற் படையினர் நாடு முழுதும் பரந்து சென்று நாஜிக் கக்ஷி வெற்றி பெற வேண்டியது அவசர அவசியம் என்று பயபயங்காட்டிப் பிரசாரம் செய்தனர். பயந்து நடுநடுங்கின வாக்காளர் நாஜிக்கக்ஷியினருக்கே ஓட்டுகளை அளித்தனர்.

ஹிட்லர் தடபுடல் வளர்ந்தது; புயற் படையினர் அட்டூழியங்கட்கும் தலைப் பட்டனர். வயோதிகரான வான் ஹிண்டன்பர்க்குக்கு ஹிட்லரின் தலைமையை அங்கீகரிக்கவேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டது. ஜெர்மனியின் புகலிடம் ஹிட்லரே என்று அறிவித்தார். ஹிட்லரின் முரட்டுப் பிடிவாதங்களுக்கு எல்லாம் தலையசைத்துக் கையெழுத்திடவேண்டிய நிர்ப்பந்தம் அந்தக் கிழவருக்கு ஏற்பட்டுவிட்டது. ஹிட்லர் ஜெர்மனியின் சர்வாதிகாரி ஆனார்.

* * *

இரண்டு வெடிகுண்டுகள் பிரயோகம்: ஒன்று ஜெர்மெனியிலுள்ள யூத ஜாதியார் மீது. சென்ற ஐரோப்பியப் பெரும்போரில் ஜெர்மனியின் தோல்விக்குக்காரணம் யூதர்களே என்றார் ஹிட்லர். எனவே இந்நாட்டிலுள்ள யூதவகுப்பினரைப் பூண்டோடு ஒழிக்கவேண்டும் என்று கட்டளையிட்டார். புயற்படையினர் புயல் வேகத்தோடு யூதர்கள்மீது பாய்ந்தனர். எத்தனையோ கொலைகள், எத்தனையோ வீடுகளுக்கு நெருப்பிட்டுக் கொளுத்தல், எத்தனையோ எந்திரசாலைகள்—தொழிற்சாலைகள் நாசம், எத்தனையோ பாங்கிகளில்

கொள்ளை, எத்தனையோ யூதப்பிரமுகர்களுக்குச் சிறைவாசம்— இப்படி எண்ணிலடங்காத அட்டூழியங்களை நாஜிகள் யூதர்கட்குச் செய்தனர்.

இரண்டாவது வெடிகுண்டு ஸார் சுவாதீனம்.

இந்த அல்லோல கல்லோலத்திற்கிடையிலேயே ஸார் பிரதேசத்தைச் சுவாதீனம் செய்துகொள்ளவேண்டும் என்று ஹிட்லர் அறைகூவி ஏவினார். ஆவேச வெறியுடனிருக்கும் ஜெர்மனி வாலிபர்கள்-வழிதுறை தெரியாமல் அலைந்துகொண்டிருந்த ஜெர்மனி இளைஞர்கள் ஹிட்லர் சொன்னதையெல்லாம் செய்து நிறைவேற்றினார்கள். ஸார் பிரதேசம் ஹிட்லர் சுவாதீனமாயிற்று. இதனால் ஜெர்மனி மக்களுக்கு ஹிட்லர் நடைமுறைகளில் சற்றே நம்பிக்கையும் பிறந்தது

ஹிட்லர் ஒட்டுப்பெற்ற ரகஸியம்.

இன்று மூன்றாவது வெடிகுண்டு போட்டிருக்கிறார்; ஜெர்மனி அவமானங்களைச் சகித்துக்கொண்டு இருக்காது என்கிறார். அர்த்தமற்ற காகித உடன்படிக்கைகளை வைத்துக்கொண்டு புழுங்க முடியாது என்கிறார். ஜெர்மனியின் சுயமரியாதைக்குப் பங்கமான விதிகளை—நியமங்களை அனைக்கணமும் சகித்துக்கொண்டிருக்க முடியாது என்கிறார். இந்த வாதத்தை ஆதாரமாகக்கொண்டே சமாதான உடன்படிக்கைப்படி ரைன் பிரதேசத்தில் படைபலம் வைக்கக்கூடாது என்ற விதியையும் லக்ஷியம் செய்யாமல் படைகளைத்திரட்டி வைத்துக்கொண்டிருக்கிறார்.

இதைக் கண்டதும் ஐரோப்பாவில் சஞ்சலம் ஏற்படத் தொடங்கியது. இது ஏதோ ஆபத்தான வேலையா யிருக்கிறது என்று உடனே பிரான்சு "ஹிட்லரின் நடவடிக்கை—போக்கு சமாதான உடன்படிக்கையை மீறுவதா யிருக்கிறது" என்று கூச்சல் கிளப்பிக்கொண்டிருக்கிறது.

• • •

ஹிட்லர் இந்த மூன்றாவது வெடிகுண்டை வீசியதற்கு என்ன காரணம்? பல காரணங்கள் உண்டு. இவைகளைப்பற்றி அநேகவிதமாய்ச் சொல்லுகிறார்கள். ஜெர்மனி தனது சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளுவதே முக்கிய நோக்கம் என்று சிலர் கூறுகின்றனர். ஏகாதிபத்திய— அதாவது நாடு பிடிக்கும் வெறி என்று சிலர் கூறுகின்றனர். இவையெல்லாம் ஒன்றுமில்லை. பிரான்சு தன்னைச் சுற்றி முற்றுகையிடுவது போல் மற்ற நாடுகளின் உதவியை நாடி நேசம் செய்துவருவதே காரணம் என்று மற்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

மேலே சொன்ன காரணங்களில் கொஞ்ச நஞ்சமேனும் உண்மையில்லாமற் போகாது. ஆனால் கடைசிக் காரணமே முழு உண்மை வாய்ந்தது என்று தெரிகிறது.

• • •

ஐரோப்பாவில் மீண்டும் இத்தகைய குழப்பம் நேர்ந்து வருவதற்குச் சென்ற பல ஆண்டுகளில் நிகழ்ந்த விவரங்களை அறிந்துகொள்ளுதல் அவசியம். ஐரோப்பாக் கண்டம் நேசம் பிடிக்கும் விஷயத்தில் பல சிக்கல்கள் நேர்கின்றன. 1919-ம் ஆண்டில் வர்ஸெய்ல்ஸ் உடன்படிக்கையிலிருந்து "நேசம்" பிடிக்கும் நாடகங்கள் விசேஷமாகத் தலை காட்டிக்கொண்டிருக்கின்றன. ஐரோப்பிய அரசியல் வாதிகள் ஐரோப்பாவை சத்துருவர்க்கம் என்றும்

மித்திர வர்க்கம் என்றும் இரு பிரிவுகள் செய்துகொண்டிருக்கின்றனர். இதனால் குழப்பம் உண்டாகிக்கொண்டே இருக்கிறது. இதை யாராலும் தடுக்கமுடியவில்லை.

பதினைந்து ஆண்டுகளில் "நேசம்" செய்யும் பெயரால் ஐரோப்பாவில் 240 உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த நேச உடன்படிக்கைகளில் பரஸ்பரம் ஒத்துழைப்பு பற்றியவை சில, புரட்சியும் எதிர்ப்பும் இல்லாமல் இருப்பதற்குச் சில, சமாதானமாகவும் அமைதியாகவும் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளுவதற்குச் சில—உடன்படிக்கைகள் இப்படியிருக்கின்றன.

* * *

இந்த நேச உடன்படிக்கைகளில் எவை மனப்பூர்வமாகச் செய்யப்பட்டவை—அதாவது உண்மை உணர்ச்சியுடன் செய்யப்பட்டவை என்று சொல்லக் கூடிய ஆசாமிகள் யாரும் இல்லை. இதுகாறும் யார் நண்பர்கள்? யார் பகைவர்கள்? என்று சொல்லுவது அரசியல் வாதிகளுக்கே கஷ்டம்.

இந்த நேச பாசங்களின் அழுகல் விவகாரங்களுக்கெல்லாம் நிலைக்களம் பிரான்சு. "இதா நாடுகளின் மோசடிக"ளைக் குறித்துப் பேசுவதே பிரான்சு அரசியல் வாதிகளின் மணியம். பெரும்போருக்குப் பிறகு போலந்தில் ராணுவ ஆதரவு தேடியதிலிருந்து நேச உடன்படிக்கைத் திருவிளையாடல் ஒரு மாதிரியாகக் கிளம்பின. கிழ்த் திசையில் ஜெர்மனி அவசியமான போது எதிர்க்கக் கூடும் என்ற உத்தேசத்தோடு போலந்து மக்களுக்கு நல்ல விதமான ராணுவப் பயிற்சியைப் பிரான்சு அளித்தது. அதன் பிறகு ஜகோஸ்லோவேகியா, ஜுகஸ்லோவியா, ருமேனியா, நாடுகளின் நட்பைத் தேடியது. ஷை மூன்று நாடுகளும் வர்ஸேல்ஸ் உடன்படிக்கையால் சற்றே வலிமை அடைந்தன என்றே சொல்ல வேண்டும். பிரான்சில் நேசம் பிடிப்பதில்—அதற்கு வேண்டிய தந்திரங்களைச் செய்வதில் பெயர் வாங்கினவர் பார்த்தோ என்பவர். இவரது கிழ் லாகர்னோ நேச உடன்படிக்கைப்படி பிரான்சு, ரஷ்ஷியா, போலந்து, ஜகோஸ் லோவியா, பால்டிக் ராஜ்யங்களான லிதுவேனியா, லாதிவ்யா, எஸ்தோனியா நாடுகள் எல்லாம் ஒன்று.

ஆனால், பார்த்தோ நினைத்தபடி நடைபெறவில்லை. அவர் அனுசரித்த நேசத் தந்திரங்களுக்குக் கொஞ்சம் முரண்பாடு ஏற்பட்டது. ஒவ்வொரு சமயத்தில் பிரான்சினால் பயிற்சி பெற்ற போலந்து ராஜ்யமே குட்டிச் சேஷ்டைகளைச் செய்ய ஆரம்பித்து விட்டது.

இதனால் பார்த்தோ மாத்திரம் நேசத் தந்திரங்களைக் கைவிடவில்லை. ஜினிவாவில் கூடும் சர்வதேச சங்கம் நேசங்களை ஏற்படுத்தவும், பிரசாரம் செய்யவும் வேண்டிய வேலைகளைச் செய்யும். யாராவது ஒரு அரசியல் வாதி வேறு நாட்டுக்குப் போகிறார் என்றால் நேசம் பிடிக்கும் விஷயமாய் வேறு நாட்டு அரசியல் அறிஞரோடு பேச்சு வார்த்தை நடத்தப் போகிறார் என்றுதான் அர்த்தம். இந்த நேச வேட்டையாகிய நோய் பெருகுவதால் ஐரோப்பிய அரசியல் நிலைமை முழுதும் பலவித மாற்றங்கட்கு உட்பட்டிருக்கிறது.

பெரும் போருக்குப் பிறகு ஜெர்மனி விஷயத்தில் உள்ளூர அச்சமும் அருவருப்பும் கொண்டு பிரான்சு தேசம் போலந்து, ஜகோஸ்லோவியா, ருமேனியா, ஜுகோஸ்லேவியா நாடுகளை நட்பாக்கிக் கொண்டது. இந்த வழியையே பிரிட்டனும் கடைப்பிடித்தது. ஆனால் பிரான்சு காட்டிக்கொண்ட முரட்டுப் பிடிவாதத்தைப் பிரிட்டன் மேற்கொள்ளவில்லை.

ஜெர்மனியை விட்டுப் பிரிந்து நேச தேசங்களுடன் சேர்ந்து போரில் கஷ்டநஷ்டங்கள் அடைந்ததற்குக் கைம்மாறாகத் தான் எதிர்பார்த்த பலன்களில் எதுவும் கைகூடாமல் போன காரணத்தால் இத்தாலி ஆச்சரியமடைந்து தனியாக இருந்து விட்டது. ஜெர்மனிக்கு விரோ

தமாய்ப் போரில் இறங்கினால் ஆப்பிரிக்காவில் குடியேற்ற நாடுகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டிய உதவி புரிவதாக இத்தாலிக்குப் பிரான்சு வாக்களித்திருந்தது. போருக்குப் பிறகு அதைப்பற்றி பிரான்சு வாய் திறக்காமல் மௌனம் சாதித்து விட்டது. இந்தத் துரோகத்தைச் சகிக்காமல் பிரான்சு மீது இத்தாலிக்கு வைரம் பெருகியது.

ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா ஆகியவை பகிஷ்கரிக்கப்பட்ட பகை நாடுகள் ஆகி விட்டன. மேற்கண்ட நாடுகள் எல்லாம் பரஸ்பரம் நட்புரிமை கொண்டு ஒரு முகமாய்க் கட்டுப்பாடாய் உறுதியாய் நிற்பதற்கு அவைகளிடம் அவ்வளவு சக்தி இல்லை. எனவே அவை ஒன்றும் செய்ய முடியாமல் சும்மா இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

போல்ஷ்விக் ஆட்சி முறையால் மறுபிறப்பு அடைந்து கொண்டிருக்கும் ரஷ்ஷியா என்றால் எல்லாரும் அருவருத்துப் பகைமை மனப்பான்மை பெருக்கிக் கொண்டு வந்தனர்.

* * *

மேற்கூறிய எல்லாவற்றையும் மொத்தமாகச் சேர்த்துப் பார்த்தால் ஐரோப்பாவில் அவநம்பிக்கைகளும், அச்சங்களும், குழப்பங்களும் ஏற்பட்டு வருகின்றமைக்கு ஒருவாறு காரணம் விளங்கும். இப்பொழுது ஐரோப்பாவில் ராணுவ ஆர்ப்பாட்டங்களில் தலைசிறந்து நிற்கும் நாடு எது என்றால் பிரான்சு என்றே சொல்ல வேண்டும். எனினும் இதுகாறும் பிரான்சின் சகாயத்திற்கு—நல்ல எண்ணத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்த சிறிய சிறிய நாடுகளில் எல்லாம் அநேக மாறுதல்கள் உண்டாகி விட்டன. போலந்து மெல்ல மாறத் தொடங்கிவிட்டது. போலந்துக்கும் பிரான்சுக்கும் மேலுக்கு நேசபாவனை இருந்தபோதிலும் உள்ளூரக் கொஞ்சம் அழுகல் நாற்றம்தான். போலந்து பிரான்சின் நேசத்தை அவ்வளவாகக் கௌரவிக்கவில்லை. போலந்தைப் பற்றுக்கோடாக வைத்துக்கொண்டு ஜெர்மனியைச் சுற்றிலும் இரும்புச் சுவர்களை எழுப்பலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த பார்த்தோவின் ஆசைகள் இவ்விதம் நிராசைகள் ஆயின.

போலந்து ஜெர்மனியுடன் கொஞ்சம் சிநேகம் பிடித்தது. இந்த நேசத்தின் கருத்துச் சமாதானத்தை முன்னிட்டு ஜெர்மனி — போலந்துகளுக்கிடையே ராணுவ ஆக்கிரமிப்புக்கள்—அதாவது ஒருவரை ஒருவர் நெருக்கித் தள்ளிக்கொண்டு போகும்படியான காரியம் நிகழக்கூடாது என்பதே. போலந்துக்கும் ஜெர்மனிக்கும் இவ்வித நேச உடன்பாடு உண்டாகியிருக்கும் விவரம் அறிந்ததும் பிரான்சு ஆச்சரியம் அடைந்தது. இதனால் பிரான்சுக்கு இதுவரை போலந்து மீது இருந்த நம்பிக்கை ஆடிப்போய்விட்டது.

நேச உடன்படிக்கைகளால் ஏற்படும் தொல்லைகளை இப்பொழுது போலந்து மக்கள் உணர்ந்துகொண்டு வருகிறார்கள், இவைகளால் இல்லாததும் பொல்லாததுமான சிக்கல்கள் ஏற்பட்டுவிடுகின்றன. இதனால் "போலந்து வாசிகள் தங்கள் நாட்டு நலங்கோரி அதைக் காப்பாற்றிக் கொள்ள எல்லைப் புறங்களைப் பாதுகாத்துக் கொள்ளவே போராடி வருகின்றனர். மற்ற விஷயங்களில் அவர்கள் தலையிடமாட்டார்கள்" என்று போலந்து அந்நிய நாட்டு மந்திரியான கர்னல் பெர் என்பவர் ஸர் ஜான் ஸைமனிடம் வெளிப்படையாய்த் தெரிவித்திருக்கிறார்.

பிரான்சிலிருந்து ஜூகோஸ்லாவியாவும் பிரிந்து விட்டது. பிரான்சு இத்தாலியிடம் "ஐயா, அப்பா" என்று நல்ல வார்த்தை சொல்லிக்கொள்ளவேண்டியதாயிற்று. இத்தாலியின் நோக்கம் ஆஸ்திரியாவின்மீதிருக்கிறது. இத்தாலி என்றால் ஜூகோஸ்லாவியாவுக்கு அருவருப்பு. எனவே, புதிதாக இத்தாலிக்கும்பிரான்சுக்கும் ஏற்பட்ட நேசமானது, ஜூகோஸ்லாவியாவைப் பிரான்சிலிருந்து பிரித்து ஜெர்மனிப்பக்கம் தள்ளிவிட்டது.

இவையெல்லாம் ஒரு விஷச் சக்கரம் போல் காணப்படுகிறது, உண்மையில் உடன்படிக்கைகள் என்பவை விஷச்சக்கரமே. ஐரோப்பிய ராஜ தந்திரிகள் இந்த நேச உடன்படிக்கைகளால்-இவைகளால் நேரிடக்கூடிய பல தாறுமாறுகளால் தலைக்குத்தலை உராய்ந்துகொண்டு வருகின்றனர்.



ஐரோப்பாவின் நிலைமை. (வறுமை—கடன் தொல்லைகள்)

பிரான்சு விஷயத்தில் ருமேனியாவுங்கூடக் கொஞ்சம் தடுமாற்றத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. ருமேனியாவில் நாஜிக் கொள்கை பலமாக வேரூன்றி வருகிறது. மக்கள் அபிமானம் ஜெர்மனி பக்கம் திரும்பிக் கொண்டிருக்கிறது. தான் மிகவும் சிரமப்பட்டுச் செய்து கொண்ட நேச உடன்படிக்கைகள் இவ்வளவு விரைவில் கரைந்துபோவதென்றால் பிரான்சுக்கு எப்படி இருக்கும்? அவ்வளவு எளிதில் விட்டுக்கொடுத்து விடுமா! பிரான்சு ஜூகோஸ்லாவியா, ருமேனியா நாடுகளின் அந்நியநாட்டு மந்திரிகளோடு ரகஸியப் பேச்சை நடத்தியது. அதன் பயனாகவே அவ்விரு நாடுகளின் ஆட்சியாளர்கள் பிரான்சுக்கு அடிக்கடி வருவதும் போவதுமா யிருந்தனர். இவர்கள் பிரான்சுக்கு வந்தபோதெல்லாம் பிரம்மாண்டமான மரியாதைகள் நடந்தன' ஆனால் திரைக்குப் பின்னால் நடந்த சங்கதிகள் வேறு-பச்சையாக அச்சுறுத்தல் நடந்திருக்கும் என்று தெரிகிறது. இது வாஸ்தவம்.

ஜூகோஸ்லாவியா, ருமேனியா நாடுகள் பிரான்சுக்குக் கடன் பட்டிருக்கின்றன. இனிமேல் பண விஷயத்தில் இவைகளுக்குப் பிரான்சின் தயவு வேண்டிய

தில்லை. ஆனால் இதுகாறும் பட்டிருக்கும் கடன் காரணமாக ஜூகோஸ்லாவியா, ருமேனியா ஆகிய நாடுகளைப் பிரான்சு மடக்கவேண்டும் என்று நினைக்கிறது.

* * *

பிரிட்டன் இன்றைக்குப் பிரான்சையே பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கிறது. பிரான்சுடன் அதிகம் நேசம் காட்டுவது ஏனைய நாடுகளோடு அதிக விரோதத்தைப் பெருக்குவது என்றே அர்த்தம். லாகர்னோ சமாதானத்திலிருந்தே நாம் ஒரு பாடத்தை கற்றுக்கொள்ளவேண்டும் என்று பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் கூறுகிறார்கள். பிரான்சுமீது ஜெர்மனி வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்கு வந்தாலும் ஜெர்மனிமீது பிரான்சு வரிந்துகட்டினாலும் பிரிட்டன் போரில் இறங்கவேண்டியதே. ஆனால் இங்கிலாந்தின் பொருட்டு எந்த நாடும் சண்டையில் இறங்கவேண்டும் என்ற கட்டாயமோ விதியோ எங்கும் இல்லை.

இருக்கும் நிலைமையைப் பார்த்தால், ஐரோப்பாவில், பொதுவாக முஸோலினியின் கையே உயர்ந்து நிற்கிறது என்று தோன்றும். முஸோலினி ஹிட்லரைப் பார்த்து ஆஸ்திரியாவினின்றும் தூரமாக விலகி நில் என்று சொன்னார். முஸோலினிக்கு இருக்கும் வலிமை ஹிட்லருக்கு இல்லை. அதனால் ஹிட்லருக்கு இஷ்டமில்லாவிட்டாலும் ஆஸ்திரியாவினின்றும் விலகி நிற்கவேண்டியதாயிற்று.

பிரான்சு–ஜெர்மனிகளுக்கிடையே வைரம் முதிர்ந்தால் இத்தாலி—ஜெர்மனிகளுக்கிடையில் நேசபாசம் வலுத்து நின்றுகொண்டுவந்தது. எந்தநாள் ஜெர்மனி ஆஸ்திரியாவின்மீது கண் வைத்ததோ அன்றுமுதல் இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் உள்ள நேசப்பான்மை குறையத் தொடங்கியது. இதனால் ஐரோப்பிய நிலைமையிலேயே தடுமாற்றம் ஏற்படத் தொடங்கியது.

முஸோலினி ஹிட்லரை விட்டு விலகினார். இதுதான் தக்க சமயம் என்று அறிந்து பிரான்சு இத்தாலிக்கு ஆசை வார்த்தை காட்டத் தொடங்கியது. அதாவது "உனக்குக் குடியேற்ற நாடுகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்கிறேன்" என்று தட்டிக் கொடுத்தது. ஆஸ்திரிய விவகாரம் எப்படியிருந்தபோதிலும் பிரான்சு—இத்தாலிகளுக்கிடையே எத்தனையோ ஆண்டுகளாக இருந்த வைரம் இந்த விவகார வியாஜமாக மறைந்தது. பிறகு ஹிட்லர் வேறு நண்பர்களைத் தேட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

* * *

இப்பொழுது ஐரோப்பிய அரசியல் நிலைமையில் குறிப்பிடத்தக்க விசித்திர அம்சம் ஒன்று உண்டு. ரஷ்ஷியாவின் வலிமையைக் கௌரவிப்பதோடு அந்த அரசாங்கத்தின் கூட்டுறவுக்கு—நேசத்திற்கு மற்ற நாடுகள் தீவிரமாய் முயன்று கொண்டிருக்கின்றன. ரஷ்ஷியா சமீப காலம்வரை தீண்டப்படாத நாடாக மதிக்கப்பட்டது எல்லாருக்கும் தெரியும்.

ரஷ்ஷியாவும் பிரான்சும் இன்று திருடர்களைப்போல் ஒன்றன் செவியை மற்றொன்று கடித்துக்கொண்டிருக்கின்றன. அந்த ரகஸியப் பேச்சுகளும் நேசபாசங்களும் மற்ற நாடுகளுக்கு ஒரு மாதிரியான கலக்கத்தைக் கொடுக்கின்றன. அதிலும் ஜெர்மனிக்கு அதிக ஆச்சரியம்—பயமும் கூட. சர்வதேச சங்கத்திற்கு வரவேண்டும் என்று ரஷ்ஷியாவுக்கு எத்தனையோ அழைப்புக்கள்—நல்ல வார்த்தைகள்.

சமரஸம்—சமாதானங்களைச் செய்வதற்கு ரஷ்ஷியாவின் அவசியம் அதிகரித்துக்கொண்டிருப்பதால் ஐரோப்பாவில் புதிய நேச உடன்படிக்கைகளும் அவற்றின் பயனாகப் புதிய தகராறுகளும் தலைகாட்டுவது சகஜமாகிவிட்டது.

சிநேகங்களைச் செய்வதில் ரஷ்ஷியாவின் அந்நிய நாட்டு மந்திரி லிட்வினோ மிகுந்த சமர்த்தராக விளங்கினார். இவர் எத்தனையோ நாடுகளுடன் குசுகுசுப் பேச்சுகள் நடத்தியிருக்கிறார். ஒருகால் ஜப்பானுடன் ரஷ்ஷியா யுத்தம் செய்ய நேர்

நால்—தான் ஐரோப்பாவில் பிடித்திருக்கும் தேசங்களால் வலிமையும் உதவியும் அடைந்து கொள்ளலாம் என்று ரஷ்யா நினைத்துக்கொண்டிருக்கலாம் என அநேக ராஜ தந்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இது உண்மையோ இல்லையோ— பலிக்குமோ பலிக்காதோ—அந்த விவகாரம் இப்போது வேண்டாம். பொதுவாக ரஷ்யா ஜப்பானுடன் யுத்தம் செய்தால் ஐரோப்பாவில் ரஷ்யாவுக்கு எதிர்ப்பிரசாரம் இருக்காது—இதுமட்டும் உறுதி.

ஜெர்மனியைச் சுற்றிலும் விரோதிகளைச் சிருஷ்டிப்பதில் பிரான்சு முனைந்து நிற்கிறது. இதைத் தற்காப்பு வேலைகள் என்று கூறிக் கொள்ளுகிறது. ஆனால் ஹிட்லரோ "இது ஜெர்மனியை அடக்கி ஒடுக்கும் சூழ்ச்சி வேலைகள்" என்கிறார். இந்த எண்ணம் பலமாகக் குடிகொண்டமையால்தான் ஹிட்லர் ரைன்லந்துக்குள் தமது படைகளைத் திரட்டி அனுப்ப முந்தினார். இதைக்கண்டு பிரான்சு பயந்து, ஜெர்மனி சர்வதேச உடன்படிக்கைகளையெல்லாம் காற்று வாக்கில் பறக்கவிட்டுக் கொண்டிருப்பதாகப் புகார் செய்துகொண்டிருக்கிறது.

என்றைக்கு பிரான்சு ரஷ்யாவுடன் நேச உடன்படிக்கை செய்துகொண்டதோ அன்றைக்கே லாகர்னு உடன்படிக்கை புதைக்கப்பட்டது. அதைக் கௌரவிக்கவேண்டிய அவசியம் ஜெர்மனிக்கு இல்லை என்று கர்ஜிக்கிறார் ஹிட்லர். பிரான்சு ரஷ்யாவுடன் சேருவது ஜெர்மனி க்ஷேமத்திற்குப் பங்கம் என்பது ஹிட்லரின் கெட்டியான அபிப்பிராயம்.

ஜெர்மனி காரணமாக மீண்டும் ஐரோப்பாவில் போர் கிளம்புமோ என்ற ஐயம் ஒவ்வொருவருக்கும் தோன்றிக் கொண்டிருக்கிறது.

["சித்திரகுப்த"—"ரங்காராம்" மொழி பெயர்ப்பு.]

4-5-36-தேதிக்குள் வந்து சேரும் கம்ப்ளீட் விடைகளுக்கு 4-அணா விலையுள்ள "குடும்ப வைத்திய பொக்கிஷம்" என்ற புத்தகம் ஒவ்வொன்று அனுப்பப்படும்.

8000 ரூ. எட்டாயிரம் ரூபாய்கள் ரூ. 8000.

1-ம் பரிசு ரூ. 5000. **போட்டிப் பரிசு.** 2-ம் பரிசு ரூ. 3000.

போட்டி எண் 2/33.	
1. கொத்தமல்லி	தனி —
2. காடி	— — — ம்
3. யானை	க — —
4. கள்	— — —
5. சிங்கம்	— — ரி

இம்மாதிரி — கோடிட்டிருக்கும் இடங்களில் விடுபட்டிருக்கும் எழுத்துக்களைப் பூர்த்தி செய்து ஒரு விடைக்குப் பிரவேசக் கட்டணம் 8-அணாவுடன் 13-5-36உக்குள் வந்துசேரும்படி அனுப்பவேண்டும். (5 வார்த்தைகளும் சேர்ந்ததே ஒரு விடை) ரூ. 3-க்கு எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். காரியாலயத்தில் சீல் செய்து வைத்திருக்கும் விடைக்குச் சரியாய் அனுப்புவோருக்கு முதல் பரிசும், குறைந்த தவறுள்ள விடைகளுக்கு முறையே மற்று பரிசுகளும் வழங்கப்படும். சகல விஷயங்களிலும் மானேஜரின் தீர்ப்பே முடிவானது. ரூ. 3-க்கு விடை அனுப்புவோர் கண்டுபிடித்த வார்த்தைகளை வரிசைக் கிரமமாய் எழுதி அனுப்பலாம். தனித்தனி கூபன்களாக எழுத வேண்டுவதில்லை. சந்தேகக் கடிதமெழுதுவோர் பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். ஒவ்வொருவரும் அனுப்பும் விடைகளுக்கு சரியான நகல் வைத்துக்கொள்ளவும். சென்ற போட்டியில் பரிசு பெற்றவர்கள் இம்முறை கலந்துகொள்வதென்றால் கம்ப்ளீட் கட்டணம் ரூ. 5 கட்டியே சேரவேண்டும். மலாய்நாட்டு நண்பர்கள் போஸ்டல் ஆர்டரில் பெரம்பூர் பேரக்ஸ் என்று எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. சரியான விடையும், பரிசு முடிவும் எல்லோருக்கும் 18-5-36ந் தேதி துண்டு பிரசுர மூலம் அறிவிக்கப்படும்.

மானேஜர்:—எஸ். நடேசன், தமிழ் வார்த்தை நிலையம், பெரம்பூர் பேரக்ஸ், சென்னை.

சீமாட்டி கார்த்தியாயினி

மூன்றாவது அதிகாரம்

இலவுகாத்த பைங்கிளி

திவான் மாளிகையில் ஏராளமான கூட்டம். எல்லாம் பட்டைச் சரிகைத் தலைப்பாகைகளும், 'ஹாட்'களும் பூண்ட பெரிய மனிதர்களே நிறைந்திருந்தனர். பெண்கள் சமத்துவத்துக்காகப் பாடுபடும் இந்நாளில் — அதிலும் பெண்ணுரிமை கொண்டாடும்—பெண்ணரசு செலுத்தும் கேரள நாடாகிய திருவாங்கூர் சமஸ்தானத்தில் நவநவமான நகைகளைப் பூண்டும், பன்னிறமுடைய விதவிதமான ஆடைகளை அணிந்தும் செல்வக் குமரிகளும் அழகிய மங்கையரும் அப் பிரமுகர்களிடையே கலந்திருந்தார்களென்றால் அது ஆச்சரியமாகாது. நிமிஷத்துக்கு நிமிஷம் மோட்டார்கார்களும், அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட சாரட்டு வண்டிகளும் வந்துகொண்டேயிருந்தன. அவ் வண்டிகளிலிருந்து சீமான்களும், சீமாட்டிகளும் இறங்கி அணியணியாக மாளிகைக்குள் சென்றனர். வாயிலில் நிறுத்தப்பட்ட திவானுடைய மனிதர்கள் அவர்களை நல்வரவேற்று உள்ளழைத்துச் சென்றனர்.

முதலில் விஜயஞ் செய்திருந்த கனவான்களுக்கும், பெண்மணிகளுக்குஞ் சிற்றுண்டி வழங்கப்பட்டது. பின்னர் அவர்கள் ஒரு பெரிய மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு மூன்று பக்கங்களிலும் நாற்காலிகளும், சோபாக்களும் வரிசை வரிசையாகப் போடப்பட்டிருந்தன. முன் பக்கத்தில் நடுவே, அகலமான மேடையொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதன்மீது அழகிய சித்திரவேலைப்பாடமைந்த இரத்தின கம்பளமொன்று விரிக்கப்பட்டிருந்தது. அம் மேடையின் ஒரு புறத்தில் வீணை, மிருதங்கம், பிடில், கஞ்சிரா முதலிய இசைக் கருவிகள் வைக்கப்பட்டிருந்தன.

இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுக்குங் காரணமென்ன? எல்லாம் நமது கார்த்தியாயினியின் வருகையை முன்னிட்டேயாம். அத்துடன், இன்று பாதநாட்டியஞ் செய்யப்போகும் தேவகுஞ்சரி பாலசரஸ்வதி அபிநயத்திலும், நடனத்திலும் மிகவும் பிரசித்தி பெற்றவளாகையாலும், எனினும், திருவாங்கூர் பக்கத்துக்குப் புதியவளாகையாலும் அவளைக்கொண்டு ஒரு கச்சேரி நடத்தி மகிழவேண்டுமென்றும், இது தனது தங்கையை யுத்தேசித்து ஏற்படுத்தப்பட்டதாகவும், பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டிருக்கும் அவளைக் கௌரவித்ததாகவும் இருக்குமென்றும் எண்ணி இப் பாதநாட்டியக் கச்சேரியைத் திவான் ஏற்பாடு செய்தார்; பிரபலஸ்தர்கள் பலருக்கும் அழைப்பு அனுப்பி வரவழைத்தார்.

விருந்தினர்கள் மண்டபத்துக்குள் நுழைந்ததும், திவான் அவர்களைப் புன்சிரிப்போடு வரவேற்றனர். அவர்கள் ஒவ்வொருவரையும் கார்த்தியாயினிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். கார்த்தியாயினி நகை தவழும் முகத்தோடு வந்தனஞ் செலுத்தி அவரவர்களுக் கேற்ப இனிய மொழி பகர்ந்தார். கார்த்தியாயினியின் பேரழகையும், உயர் குடும்பத் தகுதியை விளக்கும் கம்பீர தோற்றத்தையுங் கண்டு பிரமித்துப்போன கனவான்களும், பெண்மணிகளும் அவளிடம் பணிவு காட்டியே உரையாடினர். கார்த்தியாயினி தன்னினத்தவராகிய மங்கையரோடு மிகவும் அளவளாவினாள். செல்வச் செருக்கி லாழ்ந்த சீமாட்டிகளும், செல்வந்தர்களுங்கூட இவளது கம்பீரத் தோற்றத்தின் முன் தாழ்ந்து போயினர். கட்டிளங் குமரிகளுக்கு அவளுடன் பேசுவதே ஒரு பெரிய இன்பமா யிருந்தது. நாராயண மேனன் ஏற்கனவே, திவானாலும், தேவகியாலும் கார்த்தியாயினிக்கு அறிமுகஞ் செய்விக்கப்பட் டிருந்தான். ஆகையால், அவன் மண்டபத்தினுள் நுழைகையில், மற்றெல்லோரையும் விட மிகப் பணிவும் அச்சமும் தோன்ற வந்தன மளித்து அப்பால் நடந்தான். இரண்டொருநாள் பழகியதிலேயே தேவகிக்கும், கார்த்தியாயினிக்கும் உருவத்திலும், குணஞ் செயலிலும் அளவு கடந்த வேற்றுமை யிருப்பதையும், அதிலும், கார்த்தியாயினி தேவகியை விடச் சகல அம்சங்களிலும் சிறந்து விளங்குவதையும் நாராயணமேனன் நன்கு உணர்ந்தான். எனினும், அவன் மனம் தேவகியைவிட்டு அவள்பால் தாவவில்லை. இது அவன் கார்த்தியாயினியிடம் பயபக்தி வினயத்துடன் நடந்து கொள்வதிலிருந்தே தெரிந்தது. தன்னால் காதலிக்கப்படும் மங்கைக்குச் சகோதரி என்றறிந்ததும், அவனுக்குக் கார்த்தியாயினியிடம் அன்பும் மதிப்பும் அதிக மேற்பட்டது.

எல்லா விருந்தினர்களுக்குங் கடைசியாக, மண்டபத்தை யடைந்தவன் நமது சிவசைலம் பிள்ளை. அவன் முகம் கவலையால் வெளுத்திருந்தது. அவனது சுருங்கிய நெற்றி மன நிலைமையைக் காட்டியது. இவ்வளவு வாட்டத்திலும், அவனது வதனம் வசீகரத்தோடேயே விளங்கியது. அவன் முகத்தில் புன்சிரிப்பைச் சிரமத்தோடு வருவித்துக்கொண்டு திவானுக்கு வந்தனஞ் செலுத்தினான். ஸர். பரமேஸ்வரன் பிள்ளை இவனைக் கண்டதும் அன்போடு, "எங்கே சிவசைலம்! ஒரு வாரமாகக் காணோம்! அன்றைக்கு ரயில் ஸ்டேஷனில் சந்தித்தது; அப்புறம் மாளிகைக்குக்கூட வரவில்லையே! ஆபீஸுக்கு லீவு போட்டிருப்பதாகவுங் கேள்விப்பட்டேன். உடம்புக் கேதாயினும் அசௌகரியமா? என்ன!" எனக் கேட்டார்.

ஆம்; ஆபீஸ் நேரந் தவிர எப்போதும் திவான் மாளிகையே கதியாகக் கிடக்கும் சிவசைலம், ஒருவாரம் வரை வாராமலிருப்பதென்றால் அவருக்கு ஆகுல மேற்படுவது சகஜந்தானே! அதிலும் தன் சாதியைச் சேர்ந்தவன் என்ற சுஜாதி யபிமானத்தால் அவனுக்கு என்ன நேர்ந்ததோ என்ற கவலை யேற்பட்டு அவர் பலரையும் விசாரித்ததில் ஆச்சரிய மொன்றுமில்லை. கார்த்தியாயினியின் பால் கொண்ட மோகத்தால், சிவசைலத்தின் மனதில் பெரும் புரட்சி யுண்டாயிற்று என்றே சொல்ல வேண்டும். உள்ளத்தில் களங்கமேற்படவே, திவான் மாளிகைக்கு ஒரு காரியமுமின்றித் தானாகச் செல்வது எப்படி என்பது அவனுக்குப் பெரிய பிரச்சினை யாகி விட்டது. இப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் தத்தளித்து மனக்கவலை அதிகரிக்க ஆபீஸுக்குச் செல்லாது தன் வீட்டிலேயே ஒரு வாரமாக அடைபட்டுக் கிடந்தான். திவானது அழைப்பு அவனுக்குக் கிடைத்ததும், அவனது இருண்ட மனதில் ஒரு ஒளி தோன்றியது. இதுவரை கார்த்தியாயினியை எவ்வாறாயினும் மீண்டும் காணவேண்டுமென்ற ஆவலைத் தலை யெடுக்க வொட்டாது அடக்கிவந்த நாணம், இச் சமயம் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டது. கடைசியாக, நாணத்தை ஆசையே வென்றது. உடனே புறப்பட்டு வந்தான். (தொடரும்)

ரொக்கப் பரிசு

ரூபா 4000

கவனியுங்கள்! சரியான விடை சென்னை "பிரசண்ட விகடன்" திருச்சி "ஆனந்தக் கூத்தன்" ஆபீஸ்களில் இருக்கிறது. 100 விடைகள் அனுப்புபவர் எழுதினால் நேரில் திறந்து விலாசத்துடன் முடிவு பிரசுரிப்போம். மேலும். எமது திட்டப்படி முதற்பரிசு பெறும் நேயர்களுக்கு பங்கு ஏற்பட்டால் அவர்கள் அனுப்பும் தொகைக்கு மேற்கொண்டு 100-க்கு 20 வீதம் அதிகம் தர உத்திரவாதம். சந்தேகம் இருப்பின் எழுதவும்.

படச் சித்திரப் போட்டி—**3.**

(முடிவு தேதி 9–5–36)

முதற் பரிசு ரூ. 2000.

2-வது பரிசு ரூபா 1000.

3-வது பரிசு ரூ 600.

முதலில் வரும் 2-கவருக்கு ரூ. 10 வீதம ரூ. 20. மற்ற 15-கவர்களுக்கு ரூபா 2 வீதம் ரூ. 30. எண்ணிக்கையில் அதிக விடையனுப்பும் 3 பேருக்கு ரூ. 200. 100. 50.

குறிப்பு:—1-செல்வன். 2-உமிழ் நீர். 3-ஓர் நோய். 4-அழுங்குதல். 5-ஓர் மாதம். 6-ஓர் சக்ரவர்த்தி.

படத்தின் முதலெழுத்தைக்கொண்டு குறிப்பின் உதவியால் சரியான வார்த்தையைக் கண்டுபிடித்து தனிக் காகிதத்தில் எழுதி முதல் விடைக்கு அணா 8 மேற்கொண்டு விடை 1-க்கு அணா 4 வீதம் M. O. செய்து ரசீதுடன் விடை 9-5-36-க்குள் வரவேண்டும். சரியான விடையே வராவிடில் குறைந்த தவருக்கு பரிசுகள் தருவோம். பரிசும் முடிவும் 12-5-36-ல் அனுப்புவோம். விடையுடன் ½-அணா ஸ்டாம்பு அனுப்பவும். மானேஜர் தீர்ப்பே முடிவானது.

மானேஜர்,

தமிழ் போட்டிப் பந்தய நிலயம், (A)

திருவண்ணாமலை.

மாய மோதிரம்

("அசலம்.")

அன்று பௌர்ணமி. தாயும் மகனும் வெண்ணிலவின் வெளிச்சத்தில் உட்கார்ந்து ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர். அவர்களது மனம் படிக்கட்டின்மேல் விழுந்த பந்துபோல படிப்படியாக பல விஷயங்களில் சென்று கொண்டிருந்தது. முடிவில் மகன் ஏதோ ஒன்றைப்பற்றிக் கேட்க, 'அதைக்கேட்டு நீ என்ன அப்பா செய்யப்போகிறாய்?' என்றாள் தாயார். அப்போது அவள் முகத்தின் இயற்கையான பிரகாசம் ஏனோ திடீரென்று மாறியது.

'அம்மா, அதை நீங்கள் சொல்லியே தான் ஆகவேண்டும். தந்தையைப்பற்றிச் சொல்வதற்கு ஏன் இப்படி அஞ்சுகிறீர்கள்? அவர் என்ன அவ்வளவு கெட்டவரா?' என்றான்.

'இல்லை, அவரைக் கொடியவரென்று எவரும் சொல்லமாட்டார்கள். ஆனால் உன் தந்தையின் நினைவு வந்தவுடன் அவர் சொன்ன ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. அதைக்கேள், பிறகு உன் தகப்பனாரைப்பற்றிச் சொல்லுகிறேன்'—என்று சொல்லலானாள்.

'நீலம்பூரைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய். அந்த ஜமீனுக்கு உரியவர் கங்காதர நாயகர். அவர் மிகுந்த அறிவாளி. தெய்வபக்தி உடையவர். தமது மாளிகைக்கு அருகிலே 'சொர்ண காமாக்ஷியம்மன்' எனும் தனது இஷ்ட தேவதைக்கென கோவில் ஒன்றைக்கட்டி, அதைப் பல சத்காலக்ஷேபங்கள் நடைபெற வினியோகித்து வந்தார். மேலும் தமிழில் மிக்க பற்றுதல் உள்ளவர். கவிகளை ஆதரிப்பதில் பெயர் போனவர். சாதுக்கள், கவிகள் என்போர் எவர் வந்தபோதிலும் பணத்தைப் பணம் என்று பார்க்கமாட்டார். குடி, சூது முதலிய கெட்ட வழக்கங்கள் அவரிடம் இல்லையெனினும், தானம் செய்வதிலேயே அவருடைய செல்வம் பெரிதும் விரயமாக்கப்பட்டது. தானத்திலும் நிதானம் நன்றன்றோ? ஆனால் செல்வம் குறையக் குறைய அவருடைய புகழும் அதிகம் பரவலாயிற்று. அவருடைய மனைவி கருணாம்பிகை. புத்ர சந்தானம் இல்லை என்பது ஒன்றே இவர்களது பெருங்குறை.

ஓர்நாள் பங்குனிமாதம். வெய்யில் கடுமையாக அடித்துக் கொண்டிருந்தது. பெரிய இரட்டைமாட்டு வண்டியொன்று அரண்மனையின் முன்பு வந்து நின்றது. அதிலிருந்து ஓர் பெண் இறங்கி வந்தாள். வயது இருபது என மதிக்கலாம். நல்ல அழகும் நாகரீக நளினங்களில் சிறந்தவளாகவும் காணப்பட்டாள். மற்றப்படி வேலையாட்கள் ஒருவரும் அவளுடன் வரவில்லை. அதிகமான நகைகள் அணிந்திராவிட்டாலும் அவளுடைய முகத்தில் ஒருவித தேஜஸ் இலங்கியது. பார்ப்பதற்கு மிகவும் பெருங்குடிப் பிறப்பினள்போல் காணப்பட்டாள். தன் வரவை ஓர் ஆள் மூலமாகக் கங்காதரருக்கு அறிவித்த பின் ஏதோ ஒன்றைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தாள். அரண்மனையில் அன்று அதிகக் கூட்டம் இல்லை. கொஞ்ச நேரத்தில் வேலையாள் திரும்பி வந்து அம்மாதை உள்ளே அழைத்துச் சென்றான்.

கங்காதரரிடம் தான் கவி இயற்றுவதில் சிறிது பாண்டித்யம் உடையவளென்று கூறி இரண்டொரு கீர்த்தனைகளை அப்பொழுதே பாடிக் காண்பித்தாள்.

காட்டியத்திலும் பெயர் பெற்றவள் போலத் தோன்றியது. அவளது பெயர் குணவதி. பெயருக்கேற்ற குணமும், அழகுக்கேற்ற அறிவும் படைத்திருந்தாள். சுருங்கக்கூறின், கங்காதாருடைய மனம் அவளுடைய கானத்தில் கண்டப்பட்டது. பரஸ்பரம் அன்பு மேலிட்டதால், அவளை அங்கேயே சிலநாள் இருக்கும்படி கேட்டுக்கொண்டார். அவளும், பழம் நழுவித் தேனில் விழுந்தாற்போல், அரண்மனையிலேயே இருந்து விட்டாள். தினம் தினம் கவிகள் இயற்றுவாள். கங்காதார் அவைகளைப் படித்து இன்புறுவார். ஜமீன்தாரின் மனைவிக்கு மட்டும் வயிற்றெரிச்சலாகவே இருந்தது. இரண்டு வருடங்களுக்குப் பிறகு குணவதி ஓர் ஆண்மகவை ஈன்றெடுத்தாள்.

குழந்தை பிறந்ததிலிருந்து குணவதியின் தேகநிலை குன்றி வந்தது. நாயகர் அநேக டாக்டர்களைக் கொண்டு எவ்வளவோ முயன்று பார்த்தார். சாந்திகள் கழித்தனர். யந்திரங்கள் கட்டினர். ஒன்றும் பிரயோசனப்படவில்லை. கடைசியாக இறந்து விட்டாள்.

ஜமீன்தார் அவளுக்காக அதிக துக்கப்பட்டார். என் செய்வார் பாவம். குழந்தையைக் காப்பாற்றுவதற்கு ஓர் வேலைக்காரியை நியமித்தார். தம்முடைய மனைவியால் குழந்தைக்குக் கெடுதி சம்பவிக்கும்போலிருந்தது. எனவே கங்காதார் வேலைக்காரியிடம் கொஞ்சம் திரவியத்தைக் கொடுத்து குழந்தையை அவளுடன் வேற்றூருக்கு அனுப்பி விட்டார்.

அவளும் அக் குழந்தையைச் சொந்தப்பிள்ளையாகவே பாவித்து வளர்த்து வந்தாள். அவனும் படித்துத் தேறி இப்பொழுது ஓர் உத்தியோகத்தில் இருக்கின்றான்'—இவ்வாறு தன் தாய் சொல்லி வந்து நிறுத்தி விடவும் சத்தியபாலன்

அவனைப்பார்த்து, 'அவன் இப்போது எங்கிருக்கின்றான்'—எனக் கேட்டான்.

உடனே அவனது தாய் அவனைக் கட்டிக்கொண்டு 'அவன் இங்கேதான் இருக்கின்றான்' என்று கோவெனக் கதறினாள்.

சத்தியபாலன் தான் இதுகாறும் தாய் எனக் கருதி வந்தவள், தனது வளர்ப்புத்தாயெனக் கண்டு ஆச்சரியப்பட்டானெனினும்—"தாயே, நான் வித்தியாசமாக எண்ணிக்கொள்வேனென்று நினைக்க வேண்டாம்' என்று தடுமாற்றத்துடன் கூறினான்.

* * *

ஜமீன்தார் கங்காதர நாயகரின் அரண்மனையிலே கொள்ளைக்கூட்டத்தார் புகுந்து, திரவியங்களையும் பொருள்களையும் களவாடிக்கொண்டு போனதைப்பற்றி நேயர்கள் கேள்விப்பட்டிருக்கலாம். முதலிலேயே கடனில் மூழ்கியிருந்த ஜமீன், கொள்ளையும் அடிக்கப்பட்ட தென்பதைக் கேள்விப்பட்டவுடன் கடன் கொடுத்திருந்தவர்கள் ஜமீன்தாரை உடனே பணத்திற்கு நிர்ப்பந்தப் படுத்தினார்கள்.

இதுவரை மிகவும் கௌரவமாக வாழ்ந்து வந்தவர். மற்றவர்களாலும் மிகக் கண்ணியமாக மதிக்கப்பட்டவர். சொத்துக்களெல்லாம் போனபிறகு இருப்பதைவிட இறப்பதே மேலெனக் கருதினார். பிராரப்தம் யாரை விட்டது. கொடுப்பவனும், அழிப்பவனும் அவனே—என்பதாக எண்ணி மனதைச் சமாதானப் படுத்தி வந்தார். இந்தச் சமயத்தில் அவருடைய மனைவி, களவு போனதையேஎண்ணியெண்ணி ஏங்கி இருந்தவள், அதே மனோ வியாதியால் மாண்டு போனாள். சொத்தையும் பறி கொடுத்து, மனைவியையும் கையிழந்தபோது அவரது மனது—பதியையும் இழந்து காரிருளில் கானகத்தே

தன் காதலியைப் பிரிந்து செல்லும் கனைது மனோவேதனையைவிட அதிகமாகவே இருந்தது எனலாம். பின் தாம் அங்கிருப்பது உசிதமல்ல வென்று ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தேசாடனமாகப் புறப்பட்டு விட்டார்.

* * *

சத்தியபுரி ஸப் இன்ஸ்பெக்டர் சத்தியபாலன் சுற்றுப்பக்கத்தில் நடக்கும் கொள்ளைக்கூட்டத்தாரைப் பிடிப்பதற்காக இருபது ஜவான்களுடன் துப்பாக்கிகள் சகிதமாகப் பக்கத்திலுள்ள 'பாசரை' மலைக்குப் புறப்பட்டார். கொள்ளைக் கூட்டத்தின் தலைவன் குமாரத்தேவன் அங்கிருப்பதைப்பற்றி இவருக்குத் துப்புக் கிடைத்திருந்தது. அங்கே சென்று சேவகர்களை வரிசையாக மலையைச்சுற்றி நிறுத்திவிட்டுத் தம்முடன் இருவரை அழைத்துக்கொண்டு, கையில் ரிவால்வரை ஏந்திய வண்ணமாக உள்ளே நுழைந்து தேடினார். திருடர்கள் வசிக்கும் கள்ளக்குகையைக் கண்டு விட்டார். மற்ற ஜவான்களின் உதவியால் அங்கிருந்த கள்வர்களை யெல்லாம் விலங்கிட்டு போலீஸ் ஸ்டேஷன் கொண்டுவந்து சேர்த்தார். அங்கு நடந்த மற்போரில் சத்தியபாலருக்குப் படுகாய மேற்பட்டது. மறுநாள் பத்திரிகைகளில் சப்இன்ஸ்பெக்டருடைய துணிகரச் செயலைப் பற்றியும், கள்வர்களிட மிருந்து கைப்பற்றப்பட்ட பொருள்களின் பொதுவிபரமும் வெளியாயின.

நீலம்பூர் ஜமீன்தார் அரண்மனையில் களவு போன பொருள்களின் ஜாபிதா போலீஸ் ஸ்டேஷனிலும் இருந்தது. அதில் காணப்பட்ட பொருள்கள், கைப்பற்றப்பட்ட சொத்துக்களில் இருந்ததால்— அவற்றிற் குரியவர் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று சர்க்கார் கெஜட்டில் பிரசுரித்தனர்.

* * *

வீட்டை விட்டுப் புறப்பட்ட கங்காதார் அநேக ஊர்களெல்லாம் சுற்றிவிட்டுக் கடைசியாகச் சத்தியபுரிக்கு வந்து சேர்ந்தார். கடை மிகுதியால் களைப்பு மேலிட்டு ஒரு வீட்டுத்திண்ணையில் சற்று இளைப்பாற உட்கார்ந்தார். அப்போது அவரது மனக்கண் முன் படச்சாயா (சினிமா) காட்சிபோல் பழைய சம்பவங்கள் சென்று கொண்டிருந்தன. திண்ணையின் ஒரு புறத்திலிருந்து புறப்பட்டு ஒரு சிட்டுக் குருவி அவ்விடம் வந்து அங்கு மிங்கும் பறந்துவிட்டு விர்ரென்று மற்ற பக்கத்திலுள்ள ஜன்னல் வழியாக வெளியேறியது. 'சிறுகுருவியே! நீ எங்கிருந்து வந்தாய்? எங்கு சென்றாய்? உன்னைப் போலவே அன்றொரு குணவதி யெனும் குயிலும் என்னிடம் வந்தாள். இருந்தாள், சென்றாள். ஆ! அப்போதிருந்த என் நிலைமை என்ன? இப்போது என் கதி என்ன? சம்சாரம் துக்கசாகரம், யாவும் மாயம் மாயம்' என்று சிந்தித்த வண்ணமாகக் கண்மூடி மௌனமா யிருந்தார்.

சற்று நேரத்தில் ஒரு மாது வீட்டிலிருந்து வெளியே வந்தவள், பெரியார் ஒருவர் களைப்பால் மெலிந்து கண்மூடி யிருப்பதைப் பார்த்து 'ஐயா, பெரியவரே, கொஞ்சம் ஏதாவது பசிக்குச் சாப்பிடுகிறீர்களா!'—என்று இரக்கமுடன் கேட்டாள். ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தவர் தனது பஞ்சடைந்த கண்களை விழித்துப் பார்த்தார். அவருக்கு அந்தக் குரலை எங்கேயோ கேட்டிருந்த மாதிரி யிருந்தது. 'ஆம்'—என அவர் தலையை அசைக்கவே, அந்த அம்மாள் உள்ளே சென்று ஓர் இலையைக் கொண்டுவந்து அன்ன மிட்டாள். சாப்பிடும்பொழுது தற்செயலாக அவள் கையில் போட்டிருந்த மோதிரத்தைப் பார்த்து விட்டார் கங்காதார்.

'இதென்ன மாயமாக இருக்கின்றது. குணவதியின் கணையாழி யன்றோ இது. அவள் தன் கைப்பட என் விரலில் அணிந்தாளே'-என்று யோசித்த வண்ணமாக, 'அம்மா, தாங்கள் எந்த ஊர்' என்று கேட்டார். 'நீலம்பூர்' என்று பதிலளித்

தாள். தான் பிறந்து வளர்ந்து பிரிந்து வந்த ஊரின் பெயரைக் கேட்டதும் மேலும் சந்தேகம் ஏற்பட்டது. கோமளமும் ஏதோ ஊன்றி யோசிக்கிறாள். 'அந்த ஊர் ஜமீன்தாரைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா?' எனக் கேட்டார்.

அதைக் கேட்டதும் அவளுடைய கண்கள் கலங்கின. இதைப் பார்த்ததும் ஜமீன் தாரும் அந்த அம்மாளை இன்னாரென்று அடையாளம் கண்டுகொண்டார்.

'ஐயோ, நீங்களா இந்தக் கோலத்துடன் இருக்கிறீர்கள்'—என்று துக்கப்பட்டாள்.

'நானும் இந்த மாய மோதிரம் இல்லாவிட்டால் கண்டுகொள்ள முடியாதுதான்'- என்றார் கங்காதரர்.

'நீங்கள் என்னிடம் அப்போது கொடுத்த நகைகளுடன் இந்த மோதிரம் கலந்திருந்தது. உங்களுடைய ஞாபகார்த்தமாகவே நான் இதை அணிந்து கொண்டிருக்கின்றேன். ஆ! இது வல்லவா மறுபடியும் நம்மைக் கூட்டி வைத்தது' என்று ஆனந்தத்துடன் கூறினாள்.

அவரும் அந்த கணையாழியை வாங்கித் தனது கண்களில் ஒத்திக்கொண்டார்.

இந்தச் சமயத்தில் சத்தியபாலன் அங்கே வந்தான். தன் தாயினால் அங்கிருப்பவர் தன் தகப்பனென்னத் அறிந்தான். அனைவரும் சந்தோஷப்பட்டார்கள். திருட்டுப்போன சொத்துக்களெல்லாம் வந்துவிட்டன என்று மகிழ்ச்சியோடு மொழிந்தான் சத்தியபாலன். ஜமீன்தார் இதைக் கேட்டு உள்ளம் பூரித்தார். பிரிந்தவர் கூடினால் பேச்சும் வேண்டுமோ?

கபார்

("ஆர். ஜீ")

ஒரு மனிதன் உங்களிடம் வந்து, "நான் ஸர். ஸி. பி. யின் உறவு. எனக்கு அவர் ஒரு வழியில் அத்தான் முறை. என் மைத்துனியின் நாத்தனாரின் பெரியம்மா பெண்ணைத் தான் அவருக்கு கொடுத்திருந்தது. ஸர். பி. எஸ். என்னோடு தான் படித்தான். காலேஜிலும் என் பக்கத்தில் தான் உட்கார்ந்து கொண்டிருந்தான். நாங்கள் மிகவும் நெருங்கிய சிநேகிதர்கள். அந்த நாளில் நான் அவனுக்கு எவ்வளவோ ஒத்தாசை செய்திருக்கிறேன். ஸர். ஏ. பி. தான் என்ன ? சொன்னாலும் அவரைத் தான் சொல்ல வேண்டும். நானில்லா விட்டால் அவருக்குப் பொழுதும் போகாது. வேலையும் நடக்காது. தினம் என்னைத் தேடி அழைத்துவா காரை அனுப்புவார்........................." என்று மேலே தன்னிஷ்டப்படி பிதற்றிக்கொண்டே போனால் உங்களுக்கு என்ன தோன்றுகிறது. அவன் அத்தோடு மட்டும் நில்லாமல் மிகுந்த பரபரப்புடன் தன் பைகளைக் தடவி விட்டு "அடடா எஸ்டர்டே நைட், டின்னரில், என் மணிபர்ஸை லூஸ் செய்து விட்டேன். என்ன ஸ்டுபிடிடி ஸார்! ஒரு ரூ அணாஸ் இருந்தால் கொடுங்கோ. இன்றைக்கு ஈவனிங் ஸூரா ரிடர்ன் பண்ணி விடுகிறேன். நான் இதை எக்ஸ்பெக்ட் பண்ணவே யில்லை சார்" என்று கையையும் நீட்டினால் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். 'ஏது இவன் பெரிய கப்சா பேர் வழி போலிருக்கிறது. இவனை விட்டு எப்படியாவது ஒழிய வேண்டும்' என்று நினைத்து அவன் கேட்ட அணாவை கொடுக்கின்றீர்கள். அவனும் அதை வாங்கிக் கொண்டு ஒரு 'தாங்க்ஸ்' உடன் போகிறான். இம்மாதிரி மனிதர்களை நூற்றுக் கணக்கில் இந் நகரில் நாம் காணலாம். இவர்களைப் பற்றி என் சொந்த அனுபவத்தைக் கீழே கூறுகிறேன்

ஒரு நாள் ஒரு மனிதன் என் வீட்டிற்குள் வந்து, "ஸார் இங்கே போர்ஷன் வாடகைக்கு இருக்கிறதா" என்று கேட்டான். வயது சுமார் 35 இருக்கலாம். படிந்து வாரின கிராப்புடனும், நல்ல

கௌரவமான உடையுடனும் விளங்கினான். எனக்கும் அவனுக்கும் பின்வருமாறு சம்பாஷணை இங்கிலீஷில் நடந்தது.

"இல்லை, ஸார், இருந்தால் 'டு லெட்' பலகை மாட்டி யிருக்காதா"

"சில பேர் போர்டு போடாமலேயே வாடகைக்கு விடுகிறார்கள்"

"நிற்க, உங்கள் பெயர் என்ன, ஸார்' என்றான்.

நான் அவரை ஒரு நாற்காலியில் அமரச் செய்தேன். பிறகு,

"என் பெயர்......................"

"ஆ அப்படிச் சொல்லுங்கள்! சுமார் சில வருஷங்களுக்கு முன் திருவனந்தபுரத்திற்கு என் வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள் அல்லவா! இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்."

நான் உண்மையில் திருவனந்தபுரம் போனதில்லை. இவனைப் பார்த்ததும் கிடையாது. இவன் நம்மை ஏமாற்ற வந்திருக்கிறானோ என்று பயந்தேன். இருந்தாலும் தைரியத்துடன், "நான் இப்பொழுது சும்மாதான் இருக்கிறேன். உங்கள் பெயர் என்ன? நீங்கள் யார்?" என்றேன்.

"நான் தான் ஸர்..................யின் பிரைவேட் ஸெக்ரடரி. இப்பொழுது இங்கே ருக்காக வந்து ஒரு வாரமாகிறது. உங்கள் க்வாலிபிகேஷன் என்ன".

"நான். B. A. ஸார்..............." என்று என் பட்டங்களை அடுக்கிக் கொண்டே போனேன். கடைசியில் "உங்கள் பெயர்" என்றேன்.

"என்னை அறியாதவர்களே கிடையாது. என் பெயர் ஆர். எஸ். கே. ஏன் ஸார், நீங்கள் இவ்வளவு படித்தும் சும்மா இருக்க வேண்டும்? அடுத்த வாரம் என் ஆபீஸர் வருகிறார். அவரிடம் நான் சொன்னால் போதும். என் வாக்கு வேத வாக்கு. அவரிடம் உங்களை அழைத்துக் கொண்டு போய் நல்ல ஜாபாகப் பார்த்து தருகிறேன்" என்றார் அம் மனிதன்.

இவ் வார்த்தைகளைச் சொன்ன உடன் எனக்கு அவர் மேலுள்ள சந்தேகம் பறந்தோடி விட்டது. என் வேலையில்லாக் கஷ்டத்தை நீக்க ஈஸ்வரன் தான் அம் மனித உருவமாக வந்தானென்று மகிழ்வடைந்தேன்.

"ஸார், உங்களுக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக யிருக்கிறேன். நீங்கள் செய்யப் போகும் உபகாரத்திற்கு நான் என்னால் முடிந்த உதவி செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று மிகுந்த மரியாதையுடன் அவரை நோக்கிச் சொன்னேன்.

சிறிது அவன் யோஜனை செய்து விட்டு "நீங்கள் அடுத்த திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்ல உடையுடன் தயாராக இருங்கள். நாலைந்து ரூபாய்க்கு பழங்களும் ஒரு ஜரிகை மாலையும் தயார் செய்து வைத்திருங்கள். நான் ஒரு டாக்ஸிக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன். சரியாக 10½ மணிக்குப் போய் பார்த்து காரியத்தை முடித்து விடலா"மென்றான்.

"அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி எனக்கு இன்னும் ஒரு வாரத்தில் கிடைக்கப் போகும் பெரிய உத்தியோகத்தை எண்ணி எண்ணி மனம் பூரித்தேன்.

"நான் போய் வருகிறேன்; சொன்னது ஞாபக மிருக்கட்டும்" என்று சொல்லி எழுந்த பின், "ஸார் உங்களிடம் பத்து ரூபா நோட்டுக்கு சேன்ஜு இருக்கிறதா" என்று தன் பையில் கையைப் போட்டார். நான் மிகுந்த பணிவுடன்,

"அதற்கென்ன! உங்களுக்கு எவ்வளவு சில்லரை வேண்டும்' என்றேன். அவர் "எட் அணாஸ் தான் தேவை" என்றார். நான் அவரிடம் உடனே ஒரு ரூபாயைக் கொடுத்து அதை வைத்துக் கொள்ளும்படி வேண்டினேன். அவர் அதை முதலில் மறுத்து பிறகு ஒருவாறு பையில் போட்டுக் கொண்டு வந்தனம் கூறிவிட்டுப் போய் விட்டார்.

எனக்கு இரவும் பகலும் வேலையைப் பற்றிய நினைவுகளே இருந்தன. ஒரு வாரம் சென்றது ஒரு யுகமாகத் தோன்றிற்று. இதற்குள் அம் மனிதன் தினம் என் வீட்டிற்கு வந்து என்னை அழைத்துக் கொண்டு ஹோட்டல்களுக்கும், சினிமா டிராமா முதலியவைகளுக்கும் போனான். எல்லாவற்றிற்கும் என் பணமே உபயோகப் படுத்தப்பட்டன. உயர்ந்த வேலை கிடைக்கப் போவதற்கு இதெல்லாம் ஒரு பொருட்டா?

திங்கட்கிழமை காலை ஒரு நல்ல சூட் போட்டுக் கொண்டு, ஸர்டிபிகேட்டுகளை தயார் செய்து கொண்டு, பழம் மாலை

முதலியவைகளுடன் தயாராக இருந்தேன். வாசலில் கார் வந்து நின்றது. உள்ளே என் நண்பன் உயர்ந்த உடைகளுடன் உட்கார்ந்திருந்தான். நான் என் சாமான்களுடன் ஏறினேன். காரும் சில நிமிஷங்களுக்குள் ஒரு பெரிய பங்களாவின் வாசலில் நின்றது. என்னிடமிருந்து பணம் வாங்கிக் காரை அனுப்பி விட்டு என் நண்பன் என்னை அழைத்துக் கொண்டு போய் உள்ளே 'விசிட்டர்ஸ் ரூமில்' உட்கார வைத்து ஒரு கார்டை அங்கிருந்த சேவகன் மூலம் அனுப்பினான். சிறிது நேரம் கழித்து அவ் வேலையாள் எங்களிடம் வந்து "12¼ மணிக்கு மேல் தான்" என்றான். நாங்களும் காத்திருந்தோம். ஒரு மணிக்கு மறுபடியும் என் நண்பன் சேவகனை ஞாபக மூட்ட அவன் உள்ளே போய் வந்து "போகலாம்" என்றான்.

உடனே என் நண்பன் பழங்களையும் மாலையையும் எடுத்துக் கொண்டு என் அப்ளிகேஷனையும் வாங்கிக் கொண்டு என்னை இருக்கச் சொல்லி விட்டுப் போனான். பிறகு பத்து நிமிஷங்களில் திரும்பி வந்து, "75 ரூபாய்க்கு ஒரு ஹெட் கிளார்க்கு வேலை முதல் தேதியிலிருந்து உனக்குக் கிடைத்து விட்டது. நேராக ஆர்டர் உனக்கு வரும். உன்னைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்றும் நான் சொன்னால் போது மென்றும் சொன்னார்." என்று சொல்லி என்னிடம் மீதியாக இருந்த 1 ரூபாயை வாங்கிக் கொண்டு மறு தினம் வீட்டில் பார்ப்பதாகச் சொல்லி விட்டுச் சென்றான்.

மறு நாள் அவன் வரவில்லை. இன்று வரை அவனைப் பார்க்கவே இல்லை. ஒரு மாதம், இரண்டு மாதம், ஒரு வருஷம் சென்றது. ஒரு ஆர்டரும் வரவில்லை. பிறகு அந்த பங்களா சேவகனை விசாரித்ததில் பின் வரும் விஷயம் தெரிய வந்தது.

அன்றைய தினம் என் நண்பன் உள்ளே போய், அந்த பெரிய மனிதனுக்கு மாலையையும் போட்டு, தான் ஒரு அஸோஸியேஷன் ஸெக்ரடரி யென்றும் டொனேஷனுக்கு வந்ததாகவும் தெரிவித்து, அம் மனிதர் கொடுத்த ரூ. 51—பெற்றுக் கொண்டு போய் விட்டான். அந்த வீட்டின் எஜமானன் ஒரு ஸர்ரும் இல்லை. ஒரு உத்தியோகஸ்தனுமில்லை. ஒரு பணக்கார செட்டியார்.

ஆனால் நான் இன்னும் தினசரி போஸ்டில் ஆர்டரை எதிர்பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன்.

("ராம்தாஸ்")

சூரியன் அஸ்தமித்துக் கையெழுத்து மறையும் சமயம். கொந்தளித்துக் கொண்டிருந்த கடலின் "சோ" என்ற சப்தத்துடன் கரையை நோக்கி வீசிக்கொண்டிருந்த கடற் காற்றின் "விர், விர்" என்ற கூச்சலும் சேர்ந்து காதைத் துளைத்துக்கொண்டிருந்தது. கட்டுமரத்தை இழுத்துக் கரையில் விட்டுவிட்டுக் கந்தன் இடுப்பிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த மீன் கூடையுடனும் தோளின்மேலிருந்த வலையுடனும் புறப்பட்டான். அவன் மனம் எதைப் பற்றிய சிந்தனையிலோ ஆழ்ந்திருந்தது. மணலில் வேகமாக நடக்கமாட்டாமல் காலைத் தூக்கித் தூக்கிக் கஷ்டத்துடன் வைத்து நடந்தான். அவன் தேகத்திலிருந்து கடல் நீர் சொட்டிக்கொண்டிருந்தது.

"கந்தா" என்று கூப்பிட்டுக் கொண்டே எதிரே வந்தான் மாரிமுத்து.

"என்ன விசேஷம்!" என்று கேட்டான் கந்தன்.

"பாக்கியம் ஓடிப்போய்விட்டாள்" என்றான் மாரிமுத்து.

கந்தன் சிரிப்புடன் தலையை அசைத்துக் கொண்டே "போடா கொழுப்பெடுத்தவனே! வேறு வேலை இல்லை உனக்கு! எப்பொழுது பார்த்தாலும் கேலிதானு?" என்று சொல்லிவிட்டு மேலே நடந்தான்.

பாக்கியத்தைக் கந்தனுக்குக் கலியாணம் செய்துகொடுக்க நிச்சயித்திருந்தார்கள். அவனும் அவள்மேல் உயிரைவைத்திருந்தான் என்பது எல்லாருக்கும் தெரியும். இதனுல் மாரிமுத்து அடிக்கடி பாக்கியத்தின் பேச்சை எடுத்துக் கந்தனைப் பரிகாசம் செய்வதுண்டு. இப்பொழுதும் தன்னை கேலி செய்வதற்காகவே மாரிமுத்து அவ்விதம் சொல்வதாகக் கந்தன் நினைத்தான்.

செம்படவர் குடிசைகள் நிறைந்தது பனந்தோப்பு என்ற கிராமம். இங்கே கந்தன் குடிசையும் இருந்தது. கிராமத்தை அடைந்த பின்தான் கந்தனுக்கு மாரிமுத்து கூறிய வார்த்தைகளின் உண்மை தெரிந்தது.

பாக்கியம் காணுமற் போய்விட்டது வாஸ்தவந்தான்; சந்தேகமில்லை. அன்று விடியற்காலத்திலிருந்து காணப்படவில்லை. பாக்கியத்தின் தகப்பன் முருகன் என்ற

கிழவன் பைத்தியம் :பிடித்தவன்போல் தன் குடிசை வாசலில் உட்கார்ந்திருந்தான். முதலில் அவனும் தன் மகள் ஓடிவிட்டதை நம்பவில்லை. எங்கேயாவது வெளியே போயிருப்பாளென்றும் சீக்கிரத்தில் திரும்பிவந்து விடுவாளென்றும் நினைத்திருந்தான். பொழுது போய்க்கொண்டேயிருந்தது. ஆனால் பாக்கியம் வரவில்லை. கிராமத்தில் போக்கிரி என்று பெயரெடுத்த வீரனும் அன்று காலைமுதல் காணப்படவில்லை என்று சிலர் வந்து கூறினார்கள். பாக்கியம் வீரனுடன் போய்விட்டாள் என்று ஏற்பட்டது.

முருகன் அடைந்த துன்பத்தை வர்ணிக்க முடியாது. பாக்கியம் ஐந்து வயதுக் குழந்தையாக இருந்தபோது அவன் தன் மனைவியை இழந்தான். பாக்கியமே அவனுக்கு உயிராக இருந்தாள். தாயில்லாக் குழந்தையை அவன் வளர்த்த அருமையைப் பாராட்டாதவர்கள் கிடையாது. பாக்கியத்தின் மறைவு அவன் உலகத்தை இருள் மயமாக்கிவிட்டது.

தான் கேள்விப்பட்டதெல்லாம் பொய்யாகவே இருக்கும் என்ற நம்பிக்கையுடன் கந்தன் முருகனைப் பார்க்க வந்தான். முருகனிருந்த நிலையைப் பார்த்ததும் அரைகுறையாக இருந்த நம்பிக்கையும் போய்விட்டது. அப்படியே உட்கார்ந்துவிட்டான். எவ்வளவோ கஷ்டத்துடன் அவன் அடக்க முயன்ற அழுகை அவனையும் மீறிக்கொண்டு வந்தது.

கந்தன் அழுவதைப் பார்த்த முருகனுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. இருவரும் ஒருவர்க்கொருவர் ஆறுதல் சொல்லிக்கொண்டார்கள். "மாமா, பாக்கியம் போனால் போகிறாள். நான் உனக்குப் பிள்ளையாக இருந்து காப்பாற்றுகிறேன்" என்று கந்தன் கூறினான். முருகன் "கந்தா, அந்தச் சிறுக்கி போனால் போகிறாள். நானே பார்த்து உனக்கு வேறொரு பெண்ணைக் கலியாணம் பண்ணி வைக்கிறேன், வருத்தப்படாதே" என்றான்.

* * *

காலச் சக்கரம் சுழன்றுகொண்டேயிருக்கிறது. ஒவ்வொன்றாக எட்டு வருஷங்கள் ஓடி மறைந்தன. பாக்கியம் அப்புறம் திரும்பி வரவேயில்லை. வீரனும் காணப்படாததனால் இருவரும் ஒன்றாகத்தான் போனார்கள் என்ற சந்தேகம் உறுதிப்பட்டது. பனந்தோப்புக் கிராமத்தில்

பல மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. முன்னிருந்த பல மனிதர்கள் இப்பொழுது காணப்படவில்லை. மறைந்து போனவர்களில் முருகனும் ஒருவன். பாக்கியம் காணமற்போன பின் முருகன் வெகுநாள் ஜீவித்திருக்கவில்லை; ஒரு வருஷத்திற்கெல்லாம் இறந்துபோனான். ஆனால் கந்தனிடம்மட்டும் அதிக மாறுதல் ஏற்படவில்லை. பலர் அவனுக்குப் பெண்கொடுக்க முன்வந்தார்கள். கந்தன் கலியாணம் வேண்டாமென்று கூறிவிட்டான்.



ஒருநாள் மாலை ஐந்து மணியிருக்கும். நடுக்கடலில் கந்தனது கட்டுமரம் மேலும் கீழுமாக அமுங்கி அமுங்கி எழுந்துகொண்டிருந்தது. மீன்கூடை முழுவதும் நிரம்பிவிட்டது. இப்பொழுதே புறப்பட்டால்தான் இருட்டுவதற்குள் கரையை அடையலாம். கந்தன் சிறிதுநேரம் கடலின் அழகில் மயங்கிநின்றான். சூரியகிரணங்களால் தாக்குண்டு கடற்பரப்பு வெள்ளித் தகடுபோல் பிரகாசித்தது. இரங்கூனிலிருந்து வரும் கப்பல் தூரத்தில் தெரிந்தது. அது சிறிதுசிறிதாக அருகில் நெருங்குவதைப் பார்த்துக்கொண்டேயிருந்த கந்தன் திடீரென்று கட்டுமரத்துக்கு அருகில் ஒரு தலை தோன்றுவதைக் கண்டு திடுக்கிட்டான். ஒரு மனிதன் கஷ்டத்துடன் நீந்திக்கொண்டு தன் கட்டுமரத்தை நோக்கிவருவதை உணர்ந்தான். கட்டுமரத்தை அவனருகில் செலுத்தி அவனைக் கையைப் பிடித்து தூக்கிக் கட்டுமரத்தில் ஏற்றினான்.

வெடவெட வென்று உதறிக்கொண்டிருந்த அந்தப் புதுமனிதனைக் கந்தன் நிதானமாகப் பார்த்தான். அவன் முகத்தை எங்கோ பார்த்திருந்ததாகத் தோன்றிற்று. ஆனால் ஆள் இன்னான் என்று நினைவில்லை. கந்தன் முகத்தைப் பார்த்த அந்தப் புது மனிதனும் திடுக்கிட்டான். ஆனால் ஒன்றையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் "அதோ வருகிறதுபார் ஒரு படகு; அதில் நான் என் நண்பர்களுடன் வந்தேன். எட்டிக் கடலைப் பார்த்துக்கொண்டிருந்த போது தவறி விழுந்துவிட்டேன்" என்று தன் கையால் சுட்டிக் காட்டினான். கந்தன் அவன் காட்டிய திசையில் பார்க்க இரங்கூனிலிருந்து

"கந்தா, நான் பாவம் செய்தேன். அதற்குத் தகுந்த பயனையும் இதோ அனுபவிக்கிறேன். வீரன் என்னை ஏமாற்றி ரங்கூனுக்கு அழைத்துப்போனான்; படாத பாடெல்லாம் படுத்தினான். இப்பொழுது தான் என்ன? கப்பலில் யார் நகையையோ திருடிவிட்டு சமுத்திரத்தில் குதித்துவிட்டான். என்ன ஆனானோ தெரியாது" என்றாள். கந்தனுக்கு மற்றொரு சந்தேகம் தீர்ந்தது.

"சரிதான், வீரன்தானா அவன்! எங்கோ பார்த்தமாதிரி இருக்கிறதே என்று முதலிலேயே நினைத்தேன். கிராதகன்!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு தான் கப்பலுக்குவந்த வரலாற்றைப் பாக்கியத்தினிடம் கூறினான். பாக்கியத்தின் வருத்தம் அதிகமாயிற்று.

"நாயனா சமாசாரம் என்ன?" என்று சந்தேகத்துடனேயே கேட்டாள். கந்தன் முருகன் இறந்ததைப்பற்றிக் கூறினான். நிலை பரிதாபகரமாக இருந்தது.

"என்னால் எல்லாருக்கும் கஷ்டம்! நானும் சுகப்படவில்லை. இனி வீரன் உயிருடன் திரும்பினாலும் அவனுடன் வாழப் போவதில்லை. கந்தா, என் குழந்தையை கடலில் போட்டுவிட்டு என்னையும் தள்ளிவிடு; உனக்குப் புண்ணியமுண்டு" என்றழுதாள். கந்தன் கண்களிலும் நீர் நிறைந்தது.

'பாக்கியம் வருத்தப்படாதே. வீரன் போனால் போகிறான், நீ என்னுடன் வந்துவிடு. எனக்குக் கூடப் பிறந்தவர்களே இல்லையே என்று ரொம்பக் குறையாக இருந்தது. இப்பொழுது நீ என் தங்கைபோல் இருக்கிறாய். வா, அம்மா, யோசனை பண்ணாதே" என்று அன்புடன் கூறினான்.

பாக்கியம் "மாமாவிடம் போடா கண்ணே, முருகா" என்று தன் குழந்தையைக் கந்தனிடம் கொடுத்தாள். கந்தன் குழந்தையைத் தழுவி முத்தமிட்டான்; பாக்கியத்தின் கண்களிலிருந்து இப்பொழுது பெருகிய நீர் ஆனந்தக்கண்ணீர் என்பதை உணர்ந்து சந்தோஷித்தான்.

வல்லப கணபதி ரக்ஷை.

இந்த கணபதிரக்ஷை ஆதிசைவ குருக்களால் ஆகம சாஸ்த்ரோக்தமாய் ஷட்கோண யந்திரத்தில் மஹா பீஜங்கள் அடக்கி மூலமந்திர ஜபதப ஹோமாக்னி முதலானதுகளும் செய்து கணபதி அனுக்ரஹத்தினால் வெளியிடப்பட்டது. இதன் மகிமை புத்ரசந்தானம், வ்யாபாரம், உத்யோகம் அதிகரிக்கும். சத்ருக்கள் பாத நிவாரணை, வ்யாதி நிவாரணை, வ்யவஹார விஷயங்கள் அனுகூலம். கர்ப்பஸ்திரீ கட்டிக்கொண்டால் சுகப்ரஸவம் உண்டாகும். நாம் எந்த காரியத்தை உத்தேசித்து இதை வரவழைத்தோமோ அந்த காரியம் உடனே ஜயம். நம்பினவர்கள் இதன் பலனை அடையலாம். இதன் விலை ரு. 1. வி. பி. சார்ஜ் அணா 5. வெளிநாட்டுக்கு தபால் சார்ஜ் ப்ரத்தியேகம்.

ஸ்பெஷல் ரக்ஷை தயார் செய்து அவரவர்கள் நாம நக்ஷத்திரம் கடித மூலம் தெரிவித்தால் அதற்கு வேண்டிய உபகரணங்கள் தயார் செய்து அனுப்ப ரூ. 10—0—0

ம-ா-ா-ஸ்ரீ T, சுப்பிரமணிய குருக்கள்,

தேவஸ்தானம்-ஸ்தானீகம், திருத்தணி போஸ்டு, சித்தூர் ஜில்லா.



காதலின் கொடுமை

—:(o):—

(நாகூர்-ஆர். கோபாலகிருஷ்ணன்.)

ஜமீன் சுந்திரம் பிள்ளையை அறியாதவர்கள் நாகையில் எவருமே கிடையாது. அவர் ஒரு பிரபல மனிதருமல்ல. கன்னடத்தையில் ஈடுபட்டவருமில்லை. அவ்வாறிருக்க பொது மக்கள் அனைவரும் அவரை யறிந்திருப்பதற்குக் காரணம் அவர் கொண்டுள்ள காமப்பித்தேயாகும். தெருவில் செல்லும் பெண்கள் யாவராய் இருந்தாலும் சரிதான். அவர்கள் மேல் கொண்டுள்ள காதலைப் பிரயோகப்படுத்தி அவர்கள் பரிசுத்தத் தன்மையை அழிப்பதற்குக் கொஞ்சமும் தயங்கமாட்டார். இதன் முடிவாக அவர் அவ்வூராரின் வெறுப்பிற்கும் கோபத்திற்கும் பாத்திரமானார்.

ஒருநாள் சாயங்காலம் மணி ஐந்து இருக்கும். சுந்திரம் பிள்ளை தன்னை அழகாக அலங்கரித்துக்கொண்டு நாகை கடற்கரைப்பக்கம் உலாவச் சென்றார். என்னே! அவர் அங்கு கண்ட காட்சி! பதினெட்டே வயதென மதிக்கத்தக்க அழகுடன் இயற்கையின் விசித்திரங்களைக் கண்டுகளித்த வண்ணம் அங்கு வீற்றிருந்தனள் ஓர் பெண். அவளது பூரண சந்திரனை யொத்த பாந்த முகமும், சிவந்த மேனியும், தாமரை இதழ்களைப்போன்ற கருணை சுரந்த கண்களும், கருத்த புருவமும், பவளம் போன்ற சிவந்த வாயும் சுந்திரம் பிள்ளையின் மனதை ஈர்த்தது. தான் காண்பது நினைவுதான் என நிச்சயித்துக் கொண்டு "ஆகா! இவ்வளவு அழகோடு கூடிய பெண்களும் இப்புவியினில் இருக்கின்றனரா! இந்நங்கைக்கு உபமானமாக வேறு எவரையுமே கூற முடியாது. மின்னல் கொடிகளிடையே பிரகாசிக்கும் பூரண சந்திரனைப்போலல்லவோ விளங்குகிறாள். இவ்வழகுக் கடலை உற்றுநோக்க இமையாத கண்கள் ஆயிரம் அல்லவோ வேண்டும். இப்பெண் யாவரின் புதல்வியோ? எதற்கும் சென்று விசாரிப்போம்" என எண்ணிய வண்ணம் அந்நங்

கை இருக்கும் இடத்தை நோக்கி நடந்தார் சந்திரம் பிள்ளை.

"பெண்ணே! நீ யார்? உன் தகப்பனர் பெயரென்ன? நீ இங்கு தனிமையாக வரக் காரணம் யாது?" என அடுக்கடுக்காக பல கேள்விகளைக் கேட்டார் சந்திரம் பிள்ளை.

"ஐயோ! நான் ஓர் அநாதை. தகப்பனை இழந்த மகாபாவி. தாங்கள் என்னைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டியது அவசியமில்லை" என மிகவும் வருத்தத்துடன் கூறினள் அப்பெண்.

"நங்கையே! ஏன் இவ்வளவு வெறுப்பாகப் பேசுகிருய்? உனக்கு ஏற்பட்ட வருத்தம் யாது? உன் அழகிய பெயரை நான் அறியக்கூடாதோ!" எனக் கூறிக்கொண்டே அப்பெண்மணியின் பக்கத்தில் அமர்ந்தார்.

"பிரபுவே! என் பெயர் கமலவல்லி என்பது, எங்கள் கஷ்டங்களை வெளியிட்டுக் கூறவும் என் நாவும் கூசுகிறது. நீங்கள் யாவரோ நான் அறியேன். அப்படி இருக்க உங்களிடம் அவைகளைக் கூறி யாது பயன்? ஒரு காதினல் வாங்கி மற்ருெரு காதினல் விட்டுவிடுவீர்கள்."

"கமலவல்லி! என் அன்பே! நீ என்ன அவ்விதம் கூறுகிருய். நான் அப்படிப் பட்டவ னல்லன். உன் விஷயத்தில் என் பூரண ஆஸ்திகளையும் இப்பொழுதே செலவு செய்யத் தயார். உன் ஆலிங்கனத்தைப் பொருட்டாக எண்ணுகிறேனே யொழிய என் அல்ப ஆஸ்தியை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை" எனக் கூறிவிட்டு கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டார் சந்திரம் பிள்ளை.

"ஆமாம், வாயினல் சொன்னல் போதுமா? இப்பொழுது அப்படித்தான் சொல்லுவீர்கள். அப்புறம் 'நீயோர், புதிதாய் இருக்கிறதே' என கொஞ்சமும் அறியாதவர்போல் பேசுவீர்கள். ஆடவர்களுடைய சகவாசமே இப்படித்தான்" எனக் கூறிவிட்டுத் தன் முகத்தை அப்புறம் திருப்பிக்கொண்டாள் கமலவல்லி.

"என், ஆருயிரே! என்னை அவ்விதம் நினைக்காதே. உனக்கு ஏற்பட்ட கஷ்டத்தைக் கூறு. இப்பொழுதே நான் நிவர்த்திக்கத் தயார். இல்லையேல்................" எனக் கூறிக்கொண்டே சந்திரம் பிள்ளை மெள்ள தன் கையை கமலவல்லியின்மேல் போட்டார். அப்பொழுது அவருக்கு சுவர்க்கத்தில் இருப்பது போன்றதோர் உணர்ச்சி ஏற்பட்டது.

"ஐயோ! தாங்கள் என்மேல் இவ்வளவு கருணை கொள்வீரென்று நான் கனவிலும் கருதவில்லை. இனிமேல் தங்களை நான் என் கணவராகவே பாவிக்கப் போகிறேன். (இவ்வார்த்தையைக் கேட்டதும் சந்திரம் பிள்ளை அளவிலா ஆனந்தம் கொண்டார்.) என் விருத்தாந்தங்களை அறிவிக்கிறேன் கேளுங்கள். நான் பன்னிரண்டு வயது சிறுமியா யிருக்கும்பொழுதே என் தகப்பனர் விண்ணுலகை யடைந்தார். அவர் இறக்கும்போது சுமார் எண்ணுயிரம் ரூபாய்கள்வரை எங்களுக்குக் கடன் இருந்தது. என் தாயோ செல்வந்தர் வீடுகளில் கூலிவேலை செய்து அதில் வந்த ஊதியத்தைக்கொண்டு சுமார் இரண்டாயிரம் ரூபாய்கள்வரை கடன் அடைத்தாள். எவ்வளவு நாட்களுக்குத்தான் நாய் போல் உழைக்கமுடியும். என் தாயாருக்கு உடல் மெலிந்தது. வேலை ஒன்றும் செய்ய முடியவில்லை. கடன்காரர்களெல்லோரும் மென்னியைப் பிடிக்கின்றனர். இன்னும் இரண்டு நாட்கள் சென்ருல் நாங்களிருவரும் கடன்காரர்களுக்கு அடி....மையாக வே....ண்டியது....தான்." எனக் கூறிவிட்டு விம்மி விம்மி அழுதாள். அவள் கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகி அவள் கன்னங்களை நனைத்தது. இச்சம்பவத்தைக் காண மனம் சகியாதவராய் "கமலவல்லி என் காதல் கனிந்த கற்கண்டே! நீ கண்ணீர் விடுவதைப் பார்த்த என் மனம் தாமரை இலை தண்ணீர்போல் தத்தளிக்கிறது. ஆகையால் நீ அழாதே! உன் கஷ்டங்களை இதோ ஒரு நொடியில் போக்கடிக்கிறேன்; பார்!" எனக் கூறி அவள் கண்ணீரை தன் அங்கவஸ்திரத்தினல் துடைத்துக்

கொண்டே, "அடே! கேசவா, வீட்டிற்குப்போய் எஜமானியம்மாவிடம் சொல்லி இரும்புப் பெட்டிக்குள்ளிருக்கும் இம்பீரியல் பாங்க் செக் புத்தகத்தை வாங்கிவா. ஒரு நொடியில்போய்விட்டு ஒரு நொடியில் வரவேண்டும். தெரியுமா!" என் சற்று தூரத்தில் நின்றுகொண்டிருந்த தன் பண்ணையாளை நோக்கி உத்திரவிட்டார்.

அரைமணி நேரத்தில் கேசவன் செக் புஸ்தகத்தைக் கொண்டு வந்து நீட்டினான். சுந்தரம் பிள்ளை அதை வாங்கிக் கொண்டு "கண்மணி கமலவல்லி! ஆறாயிரம் ரூபாய் போதுமா அல்லது இன்னும் ஆயிரம் ரூபாய் கூட எழுதட்டுமா?" என வினவினார்.

"பிராணநாதா! இதற்கெல்லாம் என்னைக் கேட்கவேண்டுமா! தங்கள் இஷ்டம் போல் செய்யுங்களேன்" என மழுப்பினாள் கமலவல்லி.

உடனே ரூபாய் ஏழாயிரத்திற்கு செக் ஒன்று எழுதி கமலவல்லியிடம் கொடுத்துவிட்டு "கண்மணி! மாணிக்கமே! எங்கே ஓர் அன்பு கனிந்த முத்தம் .... என கொஞ்சலாகக் கேட்டுவிட்டு இறுகக் கட்டி ஆலிங்கனம் செய்துகொண்டார் சுந்திரம் பிள்ளை. ஆனால் கமலவல்லியோ சற்று நாணிக் கோணிக்கொண்டு "நாதா! இருட்டி விட்டது .... நீங்கள் எங்கே போய்விட்டீர்கள்? நான் எங்கே போய் விடப் போகிறேன். வாருங்கள் என் மாளிகைக்குச் செல்லலாம்" என அழைத்தனள். சுந்திரம் பிள்ளையும் அதற்கு இணங்கினார். ஆனால் கேசவனோ அத்தருணத்தில், "யஜமானங்களே! வக்கீல் நாராயணசுவாமி அய்யர் தங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். ஏதோ சில முக்கியமான விஷயங்கள் உங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமாம்" என அறிவித்தான். இதைக் கேட்டவுடன் சுந்திரம் பிள்ளை சற்றுநேரம் யோசனை செய்துவிட்டு "கண்மணி கமலவல்லி, என் ஆருயிரே! நீ உன் மாளிகைக்குச் செல். நான் வீட்டிற்குப்போய் நாராயணசுவாமி அய்யரைப் போகச் சொல்லிவிட்டு இரவு ஆகாரத்திற்கு உன் வீட்டிற்கு வந்துவிடுகிறேன். இது திண்ணம்" எனக் கூறினார்.

"ஆ! நாதா, நாதா!............என்ன வார்த்தை சொன்னீர்கள்?....தங்களை விட்டுப் பிரிவதா?........அது முடியாத காரியம். தாங்கள் என்னுடன் கூடத்தான் வரவேண்டும். இல்லையேல்..........." எனக் கூறி கண்ணீர் விட்டு அழுதனள்.



"கண்ணே, கட்டிக்கரும்பே! வீணில் வருந்தாதே. நாராயணசுவாமி அய்யர் ஏதோ அவசரகாரியமாய் வந்திருப்பதாய் சொல்லியனுப்பி யிருக்கிறார். நான் போய் விஷயத்தை அறிந்துகொண்டு ஒரு நொடி யில் திரும்பிவிடுகின்றேன். வரும் போது உனக்கு ஏதாவது........................"

"துன்பக்கடலில் மூழ்கி யிருக்கும் எனக்கு என்னவேண்டும்? துன்பம் நீங்கினால் அது ஒன்றே போதும்"



"காதலியே! உனக்கு இனிமேல் துன்பம் ஏது ! முற்றிலும் இன்பம்தான். அதுவும் ஜமீன் சுந்திரம் பிள்ளையின் மனதைக் கவர்ந்த உனக்கு இனி ஏற்படப் போகும் இன்பத்திற்கு ஓர் எல்லையுமுண்டோ!"

"பிராணநாதரே! தாங்கள் சொல்வதெல்லாம் உண்மைதான். ஆனால் செல்வக் குடியில் பிறந்து வளர்ந்த, அதுவும் தங்களால் காதலிக்கப்பட்ட யான் ஆபரண மின்றி........................" எனக் கூறி முடிப்பதற்குள் கமலவல்லியின் நெஞ்சை துக்கம் அடைத்துக்கொண்டது. மேலே கூறமுடியாமல் மென்னு மென்னு விழுங்கினாள். சுந்திரம் பிள்ளை கமலவல்லியின் உள்ளக் கருத்தை அறிந்து கொண்டு "என் மனதைக் கவர்ந்த மடமானே! இதுதானா ஓர் பிரமாதம்! எல்லாம் வரும்போது கொண்டுவருகிறேன். நாழிகையாகி விட்டது. சீக்கிரம் உன் மாளிகைக்குச் செல். வழித்துணைக்கு கேசவனை யனுப்பட்டுமா!" எனக் கூறினார்.

"வேண்டாம், வேண்டாம் நான் தனியாகவே செல்லுகிறேன். தாமதமில்லாமல் சீக்கிரம் வந்துவிடுங்கள்" என பதிலளித்தாள் கமலவல்லி.

காதலர்கள் இருவரும் பிரிந்தனர். சுந்திரம் பிள்ளைக்கு கமலவல்லியை விட்டுப் பிரிவது சுவர்க்கத்தை விட்டுப் பிரிவதுபோல் இருந்தது. கமலவல்லியோ நேராக பாங்கிக்குச் சென்று செக்கை மாற்றி பணத்தைப் பெற்றுக்கொண்டு தன் வீட்டை யடைந்தனர்.

இரவு சுமார் மணி ஏழு இருக்கும். கமலவல்லி தன் இரவு உடையை அணிந்து கொண்டு தன் காதலர் சுந்திரம் பிள்ளையின் வரவை எதிர் பார்த்தவண்ணம் வாயிற்படியில் நின்றுகொண்டிருந்தனள். சற்று நேரத்திற்கெல்லாம் கமலவல்லியின் வீட்டு வாயிலில் ஒரு கார் வந்து நின்

றது. அதினின்றும் சுந்திரம்பிள்ளை ஓர் நகைப்பெட்டியுடன் இறங்கினார். எண்ணிக்கையற்ற வைரமோதிரங்களாலும், நவரத்ன மாலையினாலும், ரிஸ்ட் வாட்சினாலும் அலங்கரித்துக்கொண்டுவந்த சுந்திரம் பிள்ளையைக் கண்டதும் கமலவல்லியின் காதல் முன்னினும் பன் மடங்கு அதிகரித்தது. சுந்திரம் பிள்ளை இறங்கியவுடன் காரும் புறப்பட்டுவிட்டது. கமலவல்லி சுந்திரம் பிள்ளையை அழைத்துக்கொண்டு உள்ளே சென்று அவரை அழகாக அலங்கரிக்கப்பட்ட ஓர் கட்டிலில் அமர்த்தினள்.

அவ்வீட்டில் ஆடவர் எவருமே காணப்படவில்லை. கமலவல்லியும், அவளுடைய தாயாரும் தமக்கையுமே அவ்வீட்டின் அங்கத்தினர்களென சுந்திரம்பிள்ளை நன்கு அறிந்துகொண்டார். "ஆகா! என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இன்று நான் நரிமுகத்தில்தான் விழித்தேன். இனிமேல் கமலவல்லி நமக்குத்தான் சொந்தம்" என எண்ணிக் குதூகலமடைந்தார். தான் கொண்டுவந்த நகைகளெல்லாவற்றையும் தன் கையினாலேயே கமலவல்லிக்கு அணிவித்து அவள் அழகைப் பருகிய வண்ணம், "கண்ணே கமலம்! எங்கே? என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு ஓர் முத................" என தன் முப்பத்திரண்டு பற்களையும் வெளியில் தெரியும் வண்ணம் இளித்தார். ஆனால் கமலவல்லியோ ஓர் இளம் மானைப்போல துள்ளிக்குதித்து அப்புறத்தோடிவிட்டு, "பிராணநாதா! கொஞ்சம் பொறுங்கள். நாம் இருவரும் சிற்றுண்டி அருந்திவிட்டு அப்புறம்............." எனக் கூறிக்கொண்டே சிற்றுண்டியை எடுத்து வருவதற்காக உள்ளே சென்றாள்.

சிற்றுண்டி எடுத்துவரச்சென்ற கமலவல்லி அரைமணி நேரமாகியும் வெளிவரும் வழியைக் காணோம். சுந்திரம்பிள்ளை வெகு நேரம்வரை பொறுத்திருந்துவிட்டு "கமலவல்லி, கமலவல்லி! சிக்கிரம் எடுத்துவா! நாழிகையாகிறது" எனக் கூறினார். "இதோ வந்துவிட்டேன்" என்ற குரல் மட்டும் சமையலறையினின்றும் வெளிப்பட்டது. சுந்திரம்பிள்ளை கமலவல்லியின் வரவை வெகு ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது சமையலறையினின்றும் யாரோ ஒருவர் வரும் காலடிச் சப்தம் கேட்கவே மலர்ந்த முகத்துடன் உற்று நோக்கினார்.

ஆ! அந்தோ! என்னே அவர் அங்கு கண்ட கோரக் காட்சி! அவர் மனம் கலங்கியது. உடல் "கிடு கிடு"வென நடுங்கியது. இரண்டு ஆடவர்கள் கையில் கூரிய கத்திகளுடன் சுந்திரம்பிள்ளையை நோக்கி ஓடிவந்தனர். அவர்கள் பின்னால் ஓர் அழகிய வாலிபன்—ஆம்..........அவன்தான்..............கமலவல்லி வேடம் பூண்டவன்—தலையில் டோப்பா மயிருடனும் கழுத்தில் பலவித நகைகளுடனும் கையில் பிஸ்டல் ஒன்றை எடுத்துக்கொண்டு விரைவாக வந்துகொண்டிருந்தனன். இன்பக் கடல் துன்பக்கடலாக மாறியது. அப்பொழுதுதான் சுந்திரம்பிள்ளைக்கு, தன்னை மோசம் செய்வதற்காகவே ஓர் அழகிய வாலிபனை பெண்வேடம் தரிக்கச்செய்து கடற்கரைக்கு அனுப்பியிருக்கிறார்களெனத் தெரியவந்தது. இன்னது செய்வதென அறியாமல் தணலிலகப்பட்ட புழுப்போல் துடிதுடித்தார். "ஐயோ....கொலை....கொலை" என உரக்கக் கத்திக்கொண்டு வாயிற் பக்கம் ஓடி கதவைத் திறக்க யத்தனித்தார். கதவு திறக்க முடியவில்லை. இரகசியத் தாழ்ப்பாள் போட்ட கதவைத் திறக்க யாவரால்தான் முடியும்! இதற்குள் அவ்விரண்டு வாலிபர்களும் சுந்திரம் பிள்ளையைக் கட்டிப் பிடித்து தரையில் படுக்க வைத்தனர். சுந்திரம் பிள்ளைக்குப் பாதி உயிர் போய்விட்டது. கண்ணீர் விட்டு அழுத வண்ணம், "ஐயோ!.......என்னைக் கொன்று விடாதீர்கள்.......விட்டு விடுங்கள்.......நான் ஓடிப் போய்விடுகிறேன்." எனக் கெஞ்சினார்.

ஆனால் அந்த ஆடவர்களில் ஒருவன் பிஸ்டலை மார்பிற்கு நேரே பிடித்தவண்ணம் "வெட்கம்கெட்ட நாயே! இப்பொழுது உன் பணத் திமிரெல்லாம் எங்கே காட்டு.

பார்ப்போம்!........காமப்பித்துக்கொண்ட மாமிசப் பிண்டமே! ஊரிலுள்ள பெண்களெல்லாம் உன் அடிமைகள் என்று நினைத்துக் கொண்டாய்? அல்லது மனைவிமார்கள் என எண்ணம் கொண்டனையா? துஷ்டப் பதரே! தெருவில் போகும் பெண்களை வேசி என்றும் விலைமாது என்றும் எண்ணி அவர்கள் பரிசுத்தத் தன்மையை பாழாக்கும் கொடிய பழக்கத்தை இன்றோடு மறந்துவிடு. அப்படிச் செய்தாயேயானால் உனக்கு வாழ்வு உண்டு. இல்லையேல் ஓர் குண்டு உன் மார்பில் ஊடுருவிப் பாய்ந்து விடும்; என்ன சொல்லுகிறாய்?" என கர்ஜித்தனன். அந்த ஆடவனின் கோரப் பார்வையையும், வீரமொழிகளையும் உற்று நோக்கிய சுந்திரம் பிள்ளையின் மனம் உருகியது. தான் இன்றுவரை செய்தவைகளெல்லாம் முற்றிலும் பிசகு என அவர்க்கே நன்கு புலப்பட்டது. மிகுந்த வணக்கமான பார்வையுடன் "இக்கிமிடத்திலிருந்து "பெண்" என்ற வாக்கியத்தையே மறந்துவிடுகிறேன். இன்றுவரை நான் செய்தவைகளெல்லாம் பிசகு என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். என்னை மன்னித்து விடுங்கள்" எனக் கெஞ்சினர்.

"சுய அறிவு அற்ற சூன்ய மனிதனே! நீயோ ஓர் பெரிய ஜமீன்தார். நாங்களோ ஏழை மக்கள். அப்படி இருக்க நீ எங்களிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும் நாங்கள் உன்னை சிறிதும் மரியாதையின்றிப் பேசவும் ஏற்பட்ட காரணத்தை இப்பொழுதாவது அறிந்து கொண்டாயா?........இவ்வளவுக்கும் மூல காரணம் நீ உன் மனதில்கொண்டிருக்கும் காமப்பித்தேயாகும். ஆகையால் இன்றோடு அப்பேயை விரட்டிவிட்டு உன் மனதை பரிசுத்தம் செய்துகொள். அந்நிய ஸ்திரீகளைக் கண்ணெடுத்தும் பாராதே உலகிலுள்ள பெண்கள் யாவரும் உன் உடன் பிறந்த சகோதரி யென உன் மனதில் வை. இனி உன் பிற்கால வாழ்க்கையில் இக்கொள்கைகள் அனைத்தையும் நீ கடைப் பிடித்து நடத்தல் வேண்டும். இல்லையேல் உன் உயிர் யமனுக்கு அர்ப்பணமாகிவிடும்' எனக் கூறிவிட்டு சுந்திரம் பிள்ளையை அவிழ்த்துவிட்டுக்கொண்டே, கமலவல்லி வேடம் தரித்த வாலிபனை நோக்கி "வீரநாதா! போய் வாயிற் கதவைத் திறந்து விடு" என கட்டளையிட்டான்.

சுந்திரம்பிள்ளை தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என எண்ணி அவசரமாக அவ்வீட்டைவிட்டு வெளியேறினர். வாயிற்படியைத் தாண்டிச் செல்லும்போது வீரநாதன் சுந்திரம் பிள்ளையை நோக்கி "நாதா! போய் வருகிறீர்களா?" எனக் குறும்பாகக் கேட்டான். இவ்வார்த்தைகள் அவர் இருதயத்திலே ஊடுருவிப் பாய்ந்து சுருக்கென்று தைத்தது.

அன்றையிலிருந்து சுந்திரம் பிள்ளை பிற ஸ்திரீகளைக் கண்டால் பத்தடி விலகியே செல்வார்.



சூழ்ச்சி பலித்தது

—:(0):—

(ஏ. ராஜமணி, மாணிக்கம்.)

"இதைப்போல் எத்தனையோ தடவை சொல்லியாச்சுதே! மீண்டும், மீண்டும் ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறீர்கள்? அந்தச் சாக்கை அணிவதைவிட ஏதேனும் பாஷாணம் உட்கொண்டு இவ்வுலகைப் பிரிகிறேன்" என்று கண்டிப்பாய் மொழிந்தாள் என் மேரி.

மகாத்மா கதர் இயக்கம் ஆரம்பித்ததிலிருந்து நானும் ஒரு கதர்த் தொண்டனாகி கதரையே அணிந்து வருகின்றேன். கடந்த மாதம்தான் விவாகம் என்ற பந்தத்தால் இணைக்கப்பட்டு எனது ஸகதர்மிணியாக மேரியை அடைந்தேன். எனது கட்டாயத்தின்பேரில் விவாக தினத்தன்று மட்டுமே மேரி கதர் மயமாய் விளங்கினாள். ஆனால் மறு தினமே கதரை அகற்றிவிட்டு பரதேச துணியால் தன்னை அலங்கரித்துக்கொண்டாள். எப்படியும் அவளை கதரையே அணிவிக்கச் செய்யவேண்டும் என்ற ஆசையே இரவு பகலாய் என் மனதை விட்டகலாதிருந்தது. எத்தனையோ போதனைகளைப் புகட்டி வந்தும், எதிர்பாராத இவ்வார்த்தைகளால் என் மனம் புண்பட்டது. "என்ன! கதர் உன் நேத்திரங்களுக்குச் சாக்கு மாதிரியாகவா தோன்றுகிறது!" என்றேன். "இல்லை! சாக்கைவிட மும்மடங்கு ரெட்டிப்பாய்த்தான் தோன்றுகிறது. நீங்கள்தான் அந்தக் கதருக்கு அடிமையாகி எப்போதும் கதர், கதர் என்று கதறுவதுடனில்லாமல் வீணே என்னையும் அக்கதருக்கு அடிமையாக்க நினைக்கிறீர்கள். இந்த உங்களது எண்ணம் இனிமேல் என்னிடம் பலியாது. உங்களுக்கு கதர் வேண்டுமாயின் நீங்கள் அணிந்து கொள்ளுங்கள். விலைநயமான சிமைத்துணி இருக்கவே செய்கி

றது. அதை நான் அணிந்துகொள்கிறேன். ஆடை விஷயத்திலுமா உங்களுக்கு அடிமையாக வேண்டும்? உங்களைப்போன்ற புத்தியில்லாதார்கள் அணியட்டும். இனி கண்டிப்பாய் என்னைத் தொந்தரவு செய்யாதேயுங்கள்." என்றாள் மேரி. "கதர்துணி சீமைத்துணியைப் போன்று மெல்லியதாக இல்லை. விலையும் கூடுதல்தாம். ஆனால் அது செய்பவர்கள் குற்றமன்று. நமது குற்றமே. மழலைப் பருவத்திலிருக்கும் கதரை யாவரும் அன்புடன் ஆதரித்து அணிந்துவந்தால் சீமைத் துணியைவிட கதர் மெல்லியதாகவும், விலை நயமாகவும் வரும். உன்னைப் போன்று யாவரும் விதண்டா வாதம் பேசினால் எப்படி அபிவிருத்தியடையும்?" என்றேன். "அப்படியானால் யாவரும் ஆதரித்து மெல்லியதாக வரும்போது பார்த்துக்கொள்ளலாமே! அதற்குள் ஏன் அவசரம்?" என்றாள். "சரிதான்! அதற்கு சரியான போஷிப்பு இருந்தாலன்றி எங்ஙனம் அபிவிருத்தியடைய முடியும்? உனக்கு சரியானபடி போஷிப்பு இல்லாவிடில் எங்ஙனம் உன்னால் ஜீவிக்கமுடியும்?" என்றேன். "கடைசியாகச் சொல்லுகிறேன். இனிமேல், கதர் என்ற பேச்சே என்னிடம் வேண்டாம்" என்று கடுமையாய் மொழிந்துவிட்டு தன் வேலையைக் கவனிக்கச் சென்றாள் மேரி.

என் இன்னுயிர்த் தோழியை எப்படியும் என்னைப்போல் கதரை ஆதரிக்கச் செய்துவிடலாம் என்றிருந்த நம்பிக்கையும் இப்போது அகன்றது. சீமைத்துணியின்மீது மோகங்கொண்ட இவளை எப்படி சுதேசியை நேசிக்கச் செய்ய இயலும்? நான் ஓர் கதர்த் தொண்டனாய் இருந்தும் என் உயிரைக் கொள்ளைகொண்ட இவள் தன்னை பரதேசத் துணிக்கே அடிமையாக்கிக்கொண்டிருப்பதை எங்ஙனம் என் மனம் இடந்தரும்? அத்துடன் என் நண்பர்களின் வசைச் சொல்லாகிய பாணத்திற்கும் இலக்காகித் தவித்தேன். என் குறிப்பறிந்து என் சொல்லைமீறி நடவாத என் இல்லாள் கதரைக் குறித்தமட்டிலும் எனக்கு எதிரியாகவே தோன்றினாள். அவளை வசியப்படுத்த ஓர் சூழ்ச்சி செய்தேன்.

அன்று பகலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு கடிதத்தை என்னிடம் தந்தாள் மேரி. மறுநாள் எங்களூரில் நடக்கப்போகும் காங்கிரஸ் கூட்டத்திற்கு என்னையும் வரும்படியாய் மங்களம் என்ற ஓர் மங்கையால் வரையப்பட்டிருந்தது. கடிதத்தைப் படித்துக்கொண்டிருக்கும்போதே மேரியின் கண்களினின்றும் சில கண்ணீர்த்துளிகள் சிந்தியதையும் கவனித்தேன். வேறு எதை வேண்டுமாயினும் பொறுத்துக்கொள்வாள். தன் ஆத்மன் இன்னொரு பெண்ணுடன் உறவு கொண்டாடுவதைமட்டும் பொறுக்கமாட்டாள்.

அடுத்தநாள் கூட்டத்திற்குப் போவதற்காக சாப்பிடும் நேரம். பசியை ஆற்றிக்கொண்டிருந்த மேரி, "அந்த மங்களம் என்ற பெண் உங்களுக்கு கடிதம் எழுத வேண்டிய காரணம் என்ன? அவளுக்கும் உங்களுக்கும் என்ன உறவு!" என்று அழுகைகலந்த குரலுடன் வினவினாள். "அவள் ஓர் அழகுள்ள மங்கை. படித்தவள். சற்று உயரமானவள். கருப்பு நிறம். சுருள் முடியுள்ளவள். எங்கள் தொண்டர் படையினள். கதர் புடவை அணிபவள்" என்று துடுக்காகப் பதிலளித்தேன். என்ன நினைத்தனளோ! அன்று தானும் வருவதாய்ச் சொன்னாள். "வேண்டாம்! வேண்டாம்!! அந்த சிரமமே உனக்கு வேண்டாம். தூய கதர் புடவை அணிந்து வீற்றிருக்கும் பெண்களுடன் எப்படி கதரணியாமல் நீ மட்டும் வரலாம்! உனக்கு வெட்கம் இல்லையா?" என்றேன். மேரி மௌனத்தில் ஆழ்ந்தாள்.

மாலை எட்டு மணிக்கு கூட்டம் ஆரம்பித்துவிட்டது. காங்கிரஸ் துவக்கி இந்த 50 வருடங்களாய்ச் செய்திருக்கும் அரிய, பெரிய சேவைகளைப் பற்றியும், காங்கிரஸ் தலைவர்களைப் பற்றியும் வெகு விமரிசையாய்ப் பேசினார் தலைவர். தேசிய கீதங்கள் பாடப்பட்டன. கதராபிமானிகள் ஏராளமாய் விஜயம் செய்திருந்தனர். கூட்

டமோ சொல்லமுடியாது. மணி ஒன்பதானது. கூட்டம் முடிந்து வீட்டிற்கு வந்தேன். மேரி கட்டிலில் படுத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். காரணம் தெரியாததால் பக்கத்தே உட்கார்ந்தேன். அவளுடைய திரு மேனியை அழகாக கதர்புடவை அலங்கரித்து அழகுபடுத்திக்கொண்டிருந்தது. தன் நேத்திரங்களி லின்றும் வழிந்தோடும் கண்ணீரைத் தடைக்கவே அக்கதர் புடவையை அணிந்தனள்போலும். "மேரி! ஏன் இப்படி காரணமின்றி அழு

இன்றாய். என்னுடன் கூட்டத்திற்கு வாவில்லையே என்ற கோபமா? நீ கதாணிக்தால் கட்டாயம் கூட்டிக்கொண்டு போயிருப்பேனல்லவா?" என்று பரிவுடன் கேட்டேன். என் வார்த்தைக்குப் பதில் சொல்லாது மீண்டும் அழத் தொடங்கினாள். ஒரு பெண்ணுடைய கண்ணீரால் கலக்கமடையாதிருக்கும் கல்மனம் படைத்த ஆண்களுமுண்டோ? மனங்கலங்கினேன். "மேரி! நீ அழவேண்டிய காரணம் என்ன? ஏன் என்னிடம் சொல்லக்கூடாதோ! காரணமின்றி நீ அழுவதை என்னால் சகிக்க முடியவில்லை. ஒருவேளை பைத்தியக்காரர்கள் உடுத்தும் இந்த கனமான சாக்கைப்போன்ற கதர்ச்சேலை கட்டிக்கொண்டிருப்பதால் அழுகின்றனையோ? ஐயோ! வேண்டாம். இப்படி அழுதுகொண்டே கதர் உடுத்தவேண்டும் என்று யார் கட்டளையிட்டது? இது என்னைப்போன்ற புத்தியற்றவர்கள் உடுத்தும் துணியல்லவா! இதை எங்கு வாங்கினாய்? உனக்கு அழகான சீமைத்துணி இருக்கவே இருக்கிறது. அதை அணிந்துகொள்கிறதுதானே! ஆயினும் சொந்த நாட்டுத் துணியே உன் மேனியை அலங்கரிக்கின்றது. என்ன அழகான அன்பான புடவை. கைதேர்ந்த வேலைக்காரனே இதை செய்திருக்கிறான்" என்று கேலியாகவும், குத்தலாகவும் மொழிந்தேன். "ஆம்! நீங்கள் இப்போது இப்படித்தான் பேசுவீர்கள். ஆண்களை நம்பவே கூடாது. என்மீது சற்றுவது அன்பு உண்டா?" என்று சொல்லி மீண்டும் அழத்தொடங்கி விட்டாள். "மேரி! உன் மீதிலா எனக்கு அன்பில்லை. என் உயிரே நீ. உன் உயிரே நான்

உடல் இரண்டேயாயினும் உயிர் ஒன்றே" என்றேன். "இல்லை! எல்லாம் பகல் வேஷம். என்னை ஏமாற்றும் தந்திரமே. என்மீது உண்மையான அன்பு இருந்தால், ஏன் அந்த மங்களம் உங்களுக்கு கடிதம் எழுதவேண்டும்? நீங்கள் இருவரும் ஒன்ருக சேர்ந்து கூட்டத்தில் தேசிய கீதம் பாடவேண்டும்?" என்று சற்று கோபத்துடன் கேட்டாள். இப்போதுதான் எனது சூழ்ச்சி பலித்தது. "மேரி! சந்தேகப் பிசாசின் வாய்ப்பட்டோரை திருப்புவது கடினம். என்ன சொல்லினும் அவர்கள் மனம் சாந்தியாகாது. இதோ பார். மங்களம் என்ற மங்கை எழுதிய கடிதத்தை. இது யாருடைய எழுத்து? மங்களம் என்ற மங்கை எவரும் இல்லை. மங்களம் அழகுள்ளவள், படித்தவள், கருப்பு, உயரமானவள், சுருள்முடி உள்ளவள் என்று சொன்னேனல்லவா? அவை எல்லாம் உன்னைப்பற்றியே! மங்களம் என்ற மேரியாகிய நீயேயல்லவா?

அன்றியும், கூட்டத்தில் நாங்கள் இருவரும் தேசிய கீதம் பாடியதாகவும் சொன்னுயல்லவா! அதுவும் மங்களமல்ல, எனது நண்பன் தங்கப்பாண்டியனையே அவ்வாறு பெண் உடை உடுத்துவித்திருந்தேன். இதை எல்லாம் கவனியாது நீ என்மீது வீணே சந்தேகமானுய். உனது சந்தேகமே உன்னைக் கதரையும் அணிய தூண்டுவித்தது. கனவிலும் கதர் என்ற உச்சரிப்பை முதலாய் எடுக்காத நீ தூய கதர் அணிந்து கூட்டத்திற்கு வந்துவிட்டாய். நானும் உன்னை கவனிக்காமலில்லை. எல்லாம் உன்னைச் சீர்திருத்த என்னுல் செய்யப்பட்ட சூழ்ச்சியேயன்றி வேறல்ல. உன் திருமேனி கதராடையால் ஜொலிப்பதைக்கண்டு என் உள்ளம் பூரிக்கின்றது. இப்போது யாவும் தெரிந்ததா?" என்றேன். தன் சந்தேகம் யாவும் நீங்கப்பெற்றவளாய் மேரி தன் திருமுகத்தை உயர்த்தி என்னை நோக்கினுள். தன் வாணுள் பூராவும் கதரையே இனி அணிவதாய் வாக்குக்கொடுத்து அதற்கு அடையாளமாக ஒரு முத்தம் தந்தாள். "கதராடை கட்டுங்களென்ற காந்தியின் வாக்கும்" என்ற பாட்டையே எப்போதும் பாடி வருகிருள் மேரி. என்னினும் சிறந்த கதரபிமானி என் நேச ஸகதர்மிணியே.

அணிலும் சிவனும்

("நாரணன்")

யாவையும் படைத்த சிவனொரு மேனாள்
அன்றிற் கூட்டம் அகலாது உறையும்
பனஞ்சோலை தனில் உலாவும் போழ்தில்,
மயிரடர் வாலும் ஒளியுறு கண்ணும்
சாம்பல் நிறமுடி வாய்ந்ததோர் அணிலைக்
கண்ணிற் கண்டான் கடற்கரை தன்னில்;
கரைமோது அலைக்குக் கொஞ்சமும் அஞ்சாது
உவர்நீர் ஆழ்ந்து அதுமூழ்கி மூழ்கிக்
கரையின் சேர்ந்து உடம்பினீர் சிலிர்த்துப்
பின்னும் மூழ்கிப் பின்னும் சிலிர்த்து
இவ்வாறாகப் பலமுறை செய்யப்
பார்த்துப் பரமன் மிகவும் வியந்து,
"சின்னஞ் சிறிய மூடஅணிலே!
என்ன நீ செய்வது இயம்பு;
பெருங்கட லலையில் சிறுவால் நனைத்துக்
கருங்கடல் நீரைக் கரையிற் சிலிர்ப்பதேன்?"
எனச்சிவன் கேட்க இவ்வணில் கூறும்:
"சிறப்புற் றோங்கும் சிவபெரு மானே!
வறட்டக் கருதினேன் வாரியை; ஏனெனில்
அகோர மானதோர் அரும்புயல் நேர்ந்து
பருத்த இந்தப் பனையினைச் சாய்த்து
அதில்நான் முடைந்த அருங் கூட்டினையும்
அத்துடன் வீழ்த்தி அல்லல் செய்ததுவால்
பனைகருங் கடலின் பக்கமாய் வீழ்ந்ததால்
கூட்டில் வசிக்கும் என்குஞ்சும் மனைவியும்
அலையினில் அடிபட்டு அதன்மேல் மிதக்கும்
அதனால் யானிங்கு அல்லும் பகலும்
சிறுவால் நனைத்துச் சிதறுவன் அதினீர்
உறுதியாய் உழைத்தால் ஒருநாள் கடைசியில்
கடலை வறட்டிக் காக்கக் குஞ்சினை
எண்ணியே இவ்வாறு உழைப்பே னாயினன்"

என அணில் சொல்லச் சிவனும் சொல்வான்:
"அசந்தர்ப்பமான அணிலே! கேளாய்
உண்மையில் அதுவோர் உதாரணமாகும்
பாரினில், பல பல குடும்பத்தார்க்கு
எல்லாக் கணவரும் இதுபோல் நன்றியும்
எல்லாத் தந்தையும் இதுபோல் அன்பும்
பூண்டா ராயின் பூமியி லிருக்கும்
மனிதர் யாவரும் வாழ்வர் சுகமே!
யான் சிருட்டிக்கும் ஆருயிர் அனைத்தும்
கழிக்கும் இன்பமாய்க் காலந்தனை" யெனச்
சொல்லி மகிழ்ந்து சுவர்க்க நாயகன்
பிரியமாய்க் குனிந்துதன் பெரிய கையினல்
அண்ட மனைத்தையும் ஆளுங் கையினல்
தடவினன் முதுகில் தயவு புரிந்தே
உறுதிப் பாடுடன் உழைக்கும் அணிலை
மூக்கு முதலதன் வால்நுனி வரைக்கும்
பச்சைக் கோடுகள் படர்ந்தன முதுகில்
நான்கு கோடுகள் நறைத்த முதுகில்
அன்பிற் கொரு நல்லடையாள மதா
தெய்வக் கையினல் செய்யப் பட்டனவே
அப்புறம் அணிற்பிளை அடர்ந்த வாலினை
உயரத் தூக்கி விரையச் சுருட்டி
விரைந் தோடினது வீட்டை நோக்கி;
குலைந்து போன புற்கூட்டினைக் கிட்டிப்
பெண்டினைக் கண்டு பிள்ளையைக் கண்டு
பிரியமுடன் கீச்சிட் டளவளாவி
சாவதான மாய்க் கரைக்குக் கொணர்ந்தது
அப்போதங்கோர் அதிசய மென்னெனில்
சிவன் தன்கையினற் செய்த கோடுபோல்
குஞ்சின் முதுகும் கோடிட் டிருந்ததே!!

போலித் துறவி

—:(o):—

(கே. ராஜகோபாலன், பி. ஏ.)

சுகதேவ் ஒரு நடுத்தர வாலிபன். நல்ல புத்திசாலி. தன் காரியத்தை ஜெயிக்க எது வேண்டுமாயினும் செய்வதற்கு அஞ்சான். விக்கிரம சிங்கபுரியில் உள்ள தனவந்தர்களுள் இவனும் ஒருவன். சிற்றின்பப் பிரியன்; ஸ்திரீலோலன்; வயது இருபத்திமூன்று இருக்கும். தக்க பெண் அகப்படாமையால் தான் இவனுக்கு இதுவரை விவாகமாகாமலிருந்தது. திடீரென்று இவன் உடம்பில் காஷாய வஸ்திரம் ஏறியது. சுகதேவ் பால்ய சந்நியாசியாகிவிட்டான்.

அக்காலத்தில் சந்நியாசிகள் சிலர் தற்காலத் துறவிகளைப் போலல்லாமல் மிகுந்த பக்தி வாய்ந்தவர்கள். "அறங்கிடந்த சிந்தையராய் ஆசையெலாந் துறந்த அறிவீர்." அவர்களுக்கு மற்றவரால் ஆகவேண்டிய காரியம் ஒன்றும் கிடையாது. அரசனும் அவர்களுக்கு ஓர் துரும்பு.

விக்கிரமசிங்க புரியிலுள்ள அரண்மனை வேலைக்காரர்கள் நகர் முழுவதும் தங்கள் எண்ணத்திற்குச் சம்மதிக்கக்கூடிய ஒரு சந்நியாசியைத் தேடி அலைந்தனர். ஒவ்வொரு துறவியும் இவர்கள் சொல்லைக் கேட்டு சீற்றங்கொண்டு இவர்களை வெருட்டினர். ஒவ்வொரு ஊராக அலைந்து வரும்பொழுது ஒரு மரத்தடியில் சுகதேவ் நிஷ்டையிலிருக்கக் கண்டார்கள். மிக்க ஆவலோடு அவரை அணுகி "ஆஹா! என்ன அழகு! என்ன காம்பீரியம்!

இந்த இளம் வயதில் இவர் ஏன் இத்தவ வேடம் பூண்டிருக்கிறார். நம் இளவரசியை மணக்க இவரே தகுந்தவர்" என்றெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டார்கள்.

இளவரசி மங்கைப் பருவமடைந்ததும் ராஜ குமாரர்களை மணக்க வெறுத்தாள். இவளுக்காக அவர்கள் அனுப்பிய காணிக்கைகளையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. பிள்ளையாரைப்போல் இவளும் பிடிவாதம் செய்தாள். "துறவியையே விவாகம் செய்துகொள்வேன்" என்று தந்தையிடம் முறையிட்டாள். இதையறிந்த சுகதேவ் இளவரசியை மணக்கக் கருதித் தவவேடம் பூண்டான். (இப்பொழுது காஷாய வஸ்திரம் ஏறியதன் காரணத்தைக் கண்டீர்களா ?) துறவிகளைத் தேடும் வேலைக்காரர்கள் கண்ணில் படும்படியான ஓரிடத்தில் இருந்து வந்தான். இவர்களைக் கண்டதும் கண்களை மூடிக்கொண்டு நிஷ்டையில் அமர்ந்தான். இவன் பண்ணிய ஜபம் தான் முன் நினைத்ததை எப்படிச் சாதித்துக் கொள்வது என்றுதான்.

வேலையாட்களும் இவனை நெருங்கி "சுவாமி, எங்கள் அரசரது விருப்பம். நீங்கள் இதற்குச் சம்மதித்து எங்களைக் காப்பாற்ற வேண்டுகிறோம்." என்று ஆரம்பித்துத் தாங்கள் வந்த காரியத்தையும் கூறி முடித்தார்கள். சுகதேவ் வாய்திறக்கவில்லை. வந்தவர்கள் தங்களுக்குத் தெரிந்த ஜாலங்களையெல்லாம் விநியோகித்துப் பார்த்தார்கள்; பயனில்லை. பின் "இவர் நிஷ்டையிலிருக்கிறார். உலகத்தையே மறந்து பிரக்ஞையற்றுக் கடவுளைத் தன் மனதில் இருத்தித் தபசு

செய்கிறூர்" என்று சொல்லிவிட்டு அகன்றூர்கள்.

கொஞ்சநேரம் கழித்து வேலைக்காரர்கள் மூலமறிந்து அரசாங்க உத்தியோகஸ்தர்களும், மந்திரி முதலானவர்களும் வந்து துறவி காலில் விழுந்து அரசன் மகளை மணக்கும்படிக் கெஞ்சிக் கேட்டார்கள். சுகதேவ் தன் முயற்சியில் வெற்றி பெற்றூன். இவனை அவர்கள் உண்மைத் துறவியென்றே நம்பிவிட்டார்கள். இவன் நிஷ்டை அவர்களை மயக்கியது.

அரசனும் வந்தான். தன்னிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டபிறகுதான் இளவரசியை மணம் புரிவது என்று தீர்மானித்திருந்தான். ஏனென்றூல் முதலிலேயே சம்மதிப்பது அக்காலத்து துறவிகள் மனோபாவத்திற்கு மாறூனது. அப்படிச் செய்தால் உண்மை விளங்கித் தனக்கு ஏதாவது தண்டனை கிடைத்துவிடுமோவென்று பயந்தான். அரசன் இப்போலித் துறவியின் கால்களில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் புரிந்து, "சுவாமி, என் மகள் தங்களைத் தவிர வேறு ஒருவரையும் விவாகம் செய்துகொள்வது இல்லை என்று சபதம் பண்ணியிருக்கிறூள். என் இல்லத்திற்கு எழுந்தருளி என் கோரிக்கையை நிறைவேற்றி என்னைத் தன்யனுக்கவேண்டுகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

சுகதேவின் மனம் மின்னல் வெட்டுப்போல் 'பளீச்' சென்று மாறியது. "கேவலம், போலித் துறவியாகிய எனக்கே ஒரு நாளும் சொப்பனத்திலும் நினைக்க முடியாத இவ்வளவு மரியாதை ஏற்படுவதாயிருந்தால் உண்மைத் துறவியின் நிலைமை எப்படி இருக்கும்" என்று நினைத்தான். மறுகணம் சுகதேவ் ஓர் உண்மைத் துறவியாக விளங்கினுன். கோபத்தோடு அரசனை விளித்து "இங்கே நில்லாமல் ஓடு. ஒரு துறவியை இப்படி இம்சிக்கத் துணிந்தாயோ!" என்று கேட்டார். அரசன் பயந்து நடுநடுங்கினுன். தன்னை க்ஷமிக்குமாறு பன்முறை நமஸ்கரித்து வருத்தத்துடன் தன் அரண்மனையையடைந்தான்.

காதலனு? காதகனு?

(நவரசந் ததும்பும் நவீனம்.)

'கண்டதுங் காதல்!' 'கேட்டதுங் காதல்!' என்றெல்லாம் மதிமயங்கிக் கெட்டலையும் வாலிபர்களுக்கு இவ்வற்புத மிகுந்த கற்பிதக் கதை தகுந்தவாறு புத்தி புகட்டி, உண்மைக்காதல் இதுவென உணர்த்துகிறது. கலாசாலை மாணவ மாணவிகளின் ஆடம்பர வாழ்க்கையையும் விபரீதப் போக்கையும் அதனுல் அவர்கள் அடையும் சீர்கேட்டையும் இந்நூல் ஆசிரியர் அப்படியே தம் இனிய எளிய நடையால் படம் பிடித்துக் காட்டியிருக்கிறூர். இவ்வருமையான நாவல் ஒவ்வொரு தமிழ் மகன் கையிலும் இருக்கவேண்டிய தவசியம். சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

இதன் விலை அணு 10 தான்.

குறிப்பு:—1936ஞு ஏப்ரல்மீ 30-ந் தேதிக்குள் வாங்குபவர்களுக்கு மட்டும் இந்நாவல் எட்டணுவுக்குக் கொடுக்கப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

பார்த்து ஆனந்திக்கவேண்டிய படம் எது?

கோவை பாரத் பிலிம்ஸார்

ஏராளமான பொருட் சிலவில் கீர்த்திபெற்ற

பம்பாய் பிலிம் சிட்டியில் தயாரித்த

ராவ்பகதூர்-ரிடையர்ட் சப் ஜட்ஜு

P. சம்பந்த முதலியார் B.A., B.L.,

நடித்த

மனோஹரா

அற்பசேர்க்கையில் வந்த வினை, வஞ்சகத்தின் வீழ்ச்சி, தாய்சொல் தவறாத தனயன், உயிர் காப்பான் தோழன், பேராசையால் வந்த வினை, சத்தியமே வெல்லும். இவைகளை விவரமாகக் காணலாம்.

உங்களூர் பிரபல தியேட்டரில் எதிர்பாருங்கள்.

சென்னை

கிரௌன் டாக்கீஸில்

15-4-1936

புதன்கிழமை முதல் ஆரம்பம்

For Booking Apply to: —**Barath Films, Coimbatore.**

"மல் யுத்தம்"

—(0)—

(என். நாகராஜன், பி. ஏ. பி. எல்.)

ஜயஸிங் ஓர் ராஜபுத்ர வீரன். அஞ்சா நெஞ்சம் படைத்த ஓர் தளகர்த்தன். அநேகம் போர்களில் முன்னணியில் நின்று குண்டுகளால் தாக்கப்பட்டும், வெற்றியுடன் திரும்பியவன். அவனது தேகத்தில் குண்டுகள் தாக்கிய வடுக்கள் தெற்றெனப் புலப்படும். யுத்த முழக்கங்கள் எப்பொழுதேனும் அவன் காதுகளில் விழுந்தால் வீரா வேசத்துடன் துள்ளிக் குதித்துப் புளகாங்கித மடைவான். தனக்கு நிகர் எவருமிலர் என ஜயக்கொடி நாட்டியவன்!

அத்தகைய வீரன் ஓர் நாள் தனது எதிரி யொருவனுடன் அகோர மல் யுத்தம் புரிந்தான். அவனது எதிரியோ சற்றும் பின்னடைவதாகத் தோன்றவில்லை. நமது வீரன் இப்பொழுது தான் தனக்கு நிகரான ஓர் எதிரியை சந்தித்தான் போலும்!

வெகு நேரம் மல் யுத்தம் நிகழ்ந்தது. திரள் திரளாக ஜனங்கள் வேடிக்கை பார்க்கக் கூடினார்கள். ஜயம் யாருக்கு என்பது மட்டும் நிச்சயமாகக் கூற முடியவில்லை.

ஜயஸிங் தனது எதிரியின் கையைப் பற்றி, வீரா வேசத்துடன் விசைகள் துடி துடிக்க, முழு பலங் கொண்டு சுற்றிச் சுற்றித் தள்ளினான். ஆனால் அவனது எதிரியோ அணுவள வேனும் பின் வாங்குவதாகத் தோன்றவில்லை. நமது வீரனது தேகத்தினின்றும் வியர்வை ஆறாக வழிந்தோடிற்று. உதடுகள் படபடவென அடித்தன. கண்கள் சிவந்து நெருப்புப் பொரியைக் கக்குவதே போன்றும் விளங்கின!

நமது ராஜபுத்ர சிங்கம் ஓர் முறை ஆங்கே கூடியிருக்கும் ஜனங்களை நோக்கினான். ஓர் விநாடி நேரம் மௌனஞ் சாதித்தான். தனது எதிரியை ஓர் முறை கோபப் பார்வையுடன் நோக்கிப் பல்லை நற நறவெனக் கடித்தான். ஆனால் அவனது எதிரியோ இதைச் சற்றும் லக்ஷியம் செய்பவனாகத் தோன்றவில்லை.

வீரன் ஓர் முறை கர்ஜித்து, எதிரியின் கையை இறுகப்பற்றி, ஓர் நிமிட நேரம் சுற்றிச் சுற்றி எறிந்தான். இதுகாறும் சிறிதும் பின் வாங்காத எதிரியும் உடனே ஓலமிடத் துவங்கினான்! நமது ராஜபுத்ர சிங்கம் ஜய மடைந்தான்! எதிரி பட படவெனத் துடித்துப் பலத்த சத்தமிட்டான்! ஆங்கே கூடியிருந்த ஜனங்

கள் சந்தோஷத்துடன் கரகோஷம் செய்தனர். நமது வீரனும் எதிரியின் மேல் ஒரே தாவலாகத் தாவினான். கண் இமைக்கும் நேரத்தில் இதுகாறும் தனது எதிரியாக விருந்த தனது மோட்டார் வண்டியுடன் எங்கோ மறைந்தான் ராஜபுத்ர வீரன்!

தங்கையின் சந்தேகம்

(த. ஸ்ரீ. நரசிம்மாசார்.)

பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்ததும் சட்டைகளைக் கழற்றிவிட்டு நாற்காலியி லுட்கார்ந்தேன். மேஜையின்மேல் கடிதம் ஒன்று இருப்பது கண்டு பிரித்துப் பார்த்தேன். அதில்:—

க்ஷேமம் சென்னை 4-5-34

அன்பார்ந்த அண்ணு,

நான் ஊரிலிருந்து வந்ததுமுதல் தங்கள் மைத்துனர் என்னுடன் சரியாக சம்பாஷிப்பதுமில்லை. வீட்டில் தங்குவதும் இல்லை. ஆபீஸிலிருந்து வீட்டிற்கு வந்ததும் அவசர அவசரமாய் ஏதோ கொஞ்சம் ஆகாரம் அருந்திவிட்டு எங்கேயோ சென்று விடுகிருர். என் மனம் அநேக எண்ணங்களுக்கு இருப்பிடமாயிற்று. ஒரு வேளை வேறு மாதர்களது மாயவலையில் சிக்கியிருக்கிருரோ என்றும் எண்ணினேன். என்னமோ ஆபீஸில் வேலையிருக்கும் என்று நினைத்து ஒருநாள், இரண்டு நாள் பொறுத்துப் பார்த்தேன். தினமும் இதே வேலையாகிவிட்டது. நேற்றுக்கு முந்தியநாள் இரவு இதைப்பற்றி அறிய என்னுல் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் கெஞ்சியும் அவர் அதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் வெளியே போய் விட்டார். இதன் உண்மை மர்மத்தை கண்டுபிடிக்கவேண்டுமென்று என் மனம் என்னைத் தூண்டியதால் அவர் அறியாமல் அவர்பின்னுல் சென்றேன். தங்கசாலைத் தெருவில் ஒருபெரிய வீட்டில் நுழைந்ததைப் பார்த்து நானும் அவ் வீட்டின் வெளிப்பக்கத்திலுள்ள ஜன்னலின் வழியாக உள்ளே என்ன நடக்கிறதென்று பார்த்தேன். அண்ணு! இதற்குமேல் எழுத என்னுல் முடியவில்லை. கை நடுங்குகிறது. ஹிருதயம் வெடித்துவிடும் நிலைமையில் என் காதலர் ஓர் இளம் பெண்ணை முத்தமிடுவதைப் பார்த்தேன் கம்பம் போல் ஸ்தம்பித்து நின்றேன். சிறிது நேரம் கழித்து சற்று மனந்தேர்ந்து வீட்டிற்கு வந்தேன். இக்கடிதத்தைத் தங்களுக்கு வரைந்தேன். இதைக் கண்டதும் இவ்விடம் வருவீராளுல் இக்காட்சியை தங்களுக்குக் கண்கூடாகக் காட்டுவேன். தாங்கள் வரும் வரையில் மௌனமாகவே பொறுத்துக்கொண்டிருக்க எண்ணியுள்ளேன். தாங்கள் இங்கு வருவதில் காலதாமதம் செய்வீராளுல் என்னைப் பயித்தியக்காரியாகவே காண்பீர் என்பது திண்ணம்.

இப்படிக்குத் தங்கள் அன்புள்ள,

தங்கை.

பத்மாவதி.

என்று எழுதியிருந்தது.

இதைப் படித்துப் பார்த்ததும் புறப்பட்டு சென்னைக்குச் சென்றேன். தங்கையைக் கண்டேன். நடந்த விஷயங்களையும் அவள் கண்ட வீட்டின் நெம்பரையும் அறிந்தேன்.

இரவு சுமார் ஏழுமணி யிருக்கலாம். தங்கசாலைத் தெருவில் குறித்த எண்ணுள்ள வீடடிற்கு சென்று உள்ளே நுழைந்தேன். அங்கே என் தங்கையின் கணவரும் மற்றும் சிலரும் பேசிக்கொண்டிருந்தனர். என்னைக் கண்டதும் என் மைத்துனர், "கோபூ! எப்பொழுது வந்தாய். ஏது நீ உன் தங்கையை இவ்விடம் கொண்டுவந்து விட்டுவிட்டுபோய் இன்னும் 10 நாட்கள் கூட ஆகவில்லையே. இதற்குள் நீ இங்கே வரவேண்டிய காரணம் என்ன? இப்பொழுது இவ்விடம்

வரவேண்டிய அவசியம் முன்பே உனக்குத் தெரியாதோ?" என்று பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டே அங்குள்ள மற்றவர்களைப் பார்த்து, "இவர்தான் என் மைத்துனர். இவரைப் பற்றியே நான் நாடக சம்பந்தமாக உங்களுக்குத் தெரிவித்தது. இவர் அநேக நாடகங்களில் நடிகராக நடித்திருக்கிறார். ஆகையால் இவர் முன் நாம் அப்பியசிக்கும் நாடகத்தை ஒத்திகை செய்து பார்க்கலாம்" என்று எனக்கும் அவர்களுக்கும் அறிமுகமாக்கி வைத்தார். அதற்குள் அங்கு கூடியிருந்தவர்களுள் ஒருவர் என் மைத்துனரைப் பார்த்து, "ஏன் ஸார் முந்தாநாள் செய்தது போல் வேஷங்களையே தரித்து நடித்துப் பார்க்கலாமே. முதலில் எல்லோரும் வீட்டிற்கு சென்று போஜனம் முடித்துக் கொண்டுவந்து விட்டால் சாவகாசமாய் நடித்துக் காண்பித்து காலையிலேகூட வீட்டிற்கு போகலாம்" என்றார். எல்லோரும் அதை ஆமோதிக்கவே வெளியே நடக்கலானோம்.

என் மைத்துனர் என்னை நான் வந்த காரணம் என்னவென்று கேட்டபோது பதில் செல்ல எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. நானும் அவனும் சிறுவயது முதல் சிநேகிதர்களாகையால் என் தங்கை எழுதிய கடிதத்தைப்பற்றி தெரிவித்தேன்.

என் மைத்துனனுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்துவிட்டது. சிரிக்க ஆரம்பித்தான்.

"உன் குட்டு வெளிபட்டு விட்டதற்காகச் சிரிக்கிறாயோ என்றேன்" நான்.

"அதற்காக சிரிக்கவில்லை கோபு, உலகத்தில் இப்படியும் ஒரு பெண் இருப்பாளா? அவள்தான் அறியாப்பெண் என்றால் சிறு வயது முதல் என்னுடைய குணங்கள் எல்லாம் தெரிந்த நீ அவள் கடிதத்தைப் பார்த்ததும் எத்தனையோ ஏழைகள் வயிற்றிற்கு இன்றி வாடும் இந்நாளில் ஐந்துரூபாய் செலவு செய்துக்கொண்டு வந்ததற்காகவே சிரிப்பு வந்துவிட்டது.

இன்னும் ஒரு வாரத்தில் எங்கள் ஆபீஸில் நடக்கப்போகும் கொண்டாட்டத்தில் அங்கே உள்ளவர்கள் ஒரு நாடகத்தை நடிக்க உத்தேசித்து நாங்கள் இப்போது பேசிக்கொண்டிருந்த வீட்டில் பயின்று வருகிறோம். நாடகம் நடத்த வேண்டிய நாள் சமீபித்து விட்டதால் 10 நாட்களாய் வீட்டில் தங்காமலும் வேறு வேலையை கவனிக்காமலும் நாளுக்கு இரண்டு தடவை அப்பியசிக்கிறோம். அன்று இரவு உன் தங்கை என்னை இதைப் பற்றி கேட்டபோது எனக்கு நேரமில்லாததால் இவைகளையெல்லாம் சொல்லாமல் வந்து விட்டேன். அன்று நாம் வேஷங்கள் தரித்து நடித்துப் பார்த்தோம். நான் நடிக்கும் நாடகத்தில் அரசவேடம் தரித்து ஒரு இராஜகன்னிகையை முத்தமிடும் சந்தர்ப்பத்தில் காற்று வருவதற்காக திறந்து வைக்கப்பட்டிருந்த மேடையின் எதிரேயுள்ள ஜன்னலின் வழியாக உன் தங்கை பார்த்திருக்க வேண்டும்," என்றான்.

இதற்குள் வீடு வந்து சேர்ந்தோம். உண்மை அறிந்த என் தங்கை வெட்கத்தால் தலை குனிந்தாள். நாங்கள் வரும்போது வாங்கிக்கொண்டு வந்த அருமையான ஆரணி பட்டுப்புடவையை எடுத்து, "வேறொரு பெண்ணை முத்தம் கொடுத்ததற்கு அபராதமாக இதை வைத்துக் கொள்," என்று சொல்லி என் தங்கையிடம் கொடுத்தார்.

என் தங்கை மௌனமாக வாங்கிக் கொண்டாள்.

"வேஷம் தரித்து முத்தம் கொடுத்ததற்காக நீ அபராதம் கட்டவேண்டியது நியாயமே. ஆனால் நான்கூட ஐந்து ரூபாய் அபராதம் கட்டினேனே. இது அல்லவோ வேடிக்கை" என்றேன் நான்.

("இரஸிகன்.")

"எனது நடிப்புக்கு ஆதர்ஸப் பெண்மணியாக மிஸ். கிரேட்டா கார்போவையே கொண்டிருக்கிறேன். அவரது நடிப்பைப் பின் பற்றியே நானும் நடித்து வருகிறேன்" என ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மி சில நாட்களுக்கு முன், "மெட்ராஸ் மெயில்" நிருபரிடம் கூறினார். இவரைப் போலவே, மற்ற நடிகைகளும் நடிகர்களும் மேனாட்டு நடிகர், வட நாட்டு நடிகர் நடிகைகளில் ஒவ்வொருவரைத் தங்களுக்கு ஆதர்ஸமாக கொண்டிருக்கலாம். அவ்வாறு கொள்ள வேண்டியதும் நடிப்பு அபிவிருத்தி யடைவதற்கு அவசியமே யாகும். தமிழ் நாட்டுச் சார்ளி, இந்தியன் ஹெரால்ட் லாயிட், தென்னாட்டுக் கோஹர் என்றெல்லாம் சில தமிழ் நடிகர்கள் பெயர் வைத்துக் கொள்வதும், அல்லது படமுதலாளிகளோ, மற்றவர்களோ வழங்குவதும் இப்போது சர்வசாதாரணமாக இருப்பதை நாம் காண்கிறோம். சமீபத்தில் கூட ஒரு புராண படத்தில் நடித்த இரு ஹாஸ்ய நடிகர்களுக்கு, லாரல், ஹார்டி என்று அப் படத் தயாரித்தோர் பட்டம் கொடுத்திருப்பதைப் பார்த்து ஆச்சர்யங் கொண்டேன். நடிப்பின் வாசனையே இன்னதென அறியாது கோமாளிக் கூத்து ஆடுபவர்களுக் கெல்லாம், மேனாட்டு, வடநாட்டு நடிகர்களின் பெயர்கள் வைக்கப்பட்டு வழங்கி வருவது கேலிக்கிடமா யிருந்தாலும், அத் திறமை வாய்ந்த நடிகர்களின் பெயர்கள் இடப்பட்ட விசேஷத்தா லாயினும் நம் நடிகர்கள் நன்றாக நடிக்க மாட்டார்களா? அல்லது தங்களுக் கிடப்பட்ட பெயர் நிலைத்து நிற்க வேண்டுமே யென்ற கவலையாலாயினும் திறமையாக நடிக்க முயல மாட்டார்களா! என்ற எண்ணம் என் போன்றார்க்கு ஒருவித திருப்தியைத் தருகிறது. அவ்வகையில், அவர்கள் மேனாட்டு நடிகர்களின் பெயர்கள் மீது வைத்துள்ள மோகத்தை வரவேற்கிறேன்.

தமிழ் நாட்டு நடிகர்கள் சினிமாக் கலையில் கவனஞ் செலுத்திச் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாகியும், இன்னும் அவர்கள் அக் கலை வளர்ச்சியில் பால பருவத்திலேயே இருந்து வருவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில், படமெடுக்கும் முதலாளிகள் தாங்கள் தயாரிக்கும் கதைகளுக்குரிய பாத்திரங்களை மேற் கொள்வதற்கு நடிகர்களைத் தேர்ந் தெடுக்கும் விஷயத்தில், நடிப்புத் திறமையையும், அழகிய தோற்றத்தையும் முக்கியமாகக் கவனிக்காது, ஏதோ பெயரைக் கருதியும், அபிமானத்தைக் கருதியும் மேற் கொள்ளும் பாத்திரத்துக்குச் சிறிதும் பொருத்த மில்லா நடிகர்களைப் பொறுக்கி யெடுத்து நடிக்கச் செய்வது ஒன்று; தாங்கள் பார்த்த படங்களில் உள்ள குணதோஷங்களை உள்ளது உள்ளவாறு கூறிச் சினிமாக் கலையில் தமிழ் நாட்டு நடிகர்களும் முன்னணிக்கு வர வேண்டுமென்ற வகையில், சிறந்த யோச

ணைகளைக் கூறுவது விடுத்து, அபிமானத்தையோ, துவேஷத்தையோ மனதில் கொண்டு எழுதும் சினிமா 'கிரிடிக்கு'கள் சிலரின் பொறுப்பற்ற விமர்சனம் மற்றொன்று; ஆக, இவ் விரு காரணங்களுமே முக்கிய மானவைகளாகும். அதிலும், இக் 'கிரிடிக்கு'களில் சிலர் செய்யும் அட்டகாசத்தாலேயே தமிழ் நாட்டில் சினி

"கிருஷ்ண சுதாமா" என்ற ஹிந்தி படத்தில்
கதாநாயகியாக நடிக்கும் ஸ்ரீமதி. கானனபாலா.

மாக் கலை வளர்ச்சி யடையாது நசுக்கப்பட்டு வருகிறது என்று கூறினால் அது மிகையாகாது.

இக் 'கிரிடிக்கு'கள் இவ்வுலகில் தங்களை விட பிரகஸ்பதிகள்—ரஸிகர்கள் யாருமில்லை; தாங்களே இந்த 'லளிதகலை'யைத் தமிழ் நாட்டில்—ஏன் உலகத்திலேயே—உத்தாரணஞ் செய்ய வந்தவர்கள் என இருமாப்பு கொண்டிருக்கிறார்கள். இப் பெருமிதத்தோடு தமிழ் நாட்டுச் சினிமா உலகில் அவர்கள் பக்க வாதம் போன்றதாகிய "வகுப்பு வாதம்' என்னும் கொடிய நோயை மெல்ல புகுத்தி வருகிறார்கள். ஒரு படத்தில் நடிக்கும் நடிகனோ அல்லது நடிகையோ சுஜாதியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால், அல்லது தங்களுக்கு வேண்டியவர்கள் என்ற காரணத்தால் அவர்கள் நல்ல தோற்ற மில்லாதவர்களா யிருந்தாலும், நடிப்புத் திறமையற்றவர்களா யிருந்தாலும் இக் 'கிரிடிக்கு'கள் அவர்களைக் கந்தர்வ புருஷர்களென்றும், ஊர்வசி, மேனகைகளென்றும் வானமளாவப் புகழ்வதும், மற்றொரு படத்தில் நடிப்போர் தங்களுக்கு வேண்டாதவர்களென்ற காரணத்தினால், அவர்கள் நன்றாகச் சிரமப்

பட்டு நடித்தாலும், சினிமாவுக் கேற்ற முகவெட்டுடையவராக இருந்தாலும் அவர்களைப் பற்றி இல்லாத குறைகளையெல்லாம் எடுத்துக் கூறி, அவர்களை எவ்வளவு கேவலமாகத் தூற்றி எழுத வேண்டுமோ அவ்வளவு பழித்து எழுதுவதும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மனதில் பொதிந்திருந்த வகுப்புவாத உணர்ச்சி ஸ்ரீமதி சுந்தராம்பாள் நடித்த 'பக்த நந்தனார்'ப் படத்தின் வாயிலாக வெளியாயிற்று. அப் படம் இவர்களது விஷமப் பிரசாரத்துக் கெல்லாம் அசையாது, தமிழ் நாட்டில் மட்டுமன்றி, சிங்கப்பூர், மலேயா போன்ற தமிழ் வழங்கும் நாடுகளிலெல்லாம் பிரசித்தி யடைந்து வருகிறது. எனினும், சமயம் நேரும்போதெல்லாம் இக் கோஷ்டியார் அப் படத்தைப் பற்றியும், ஸ்ரீமதி சுந்தராம்பாளைப் பற்றியும் இன்னுங் குறை கூறியே கட்டுப் பாடாக எழுதி வருகின்றனர்.

"தேவதத்தா" என்னும் ஹிந்தி படத்தில் நடிக்கும் ஸ்ரீமதி. ரேணுகாகோஷ்.

மற்றொரு உதாரணம் உங்களுக்குக் கூறுகிறேன். சமீபத்தில், இரு சமூகப் படங்கள் வெளிவந்தன. "பதி பக்தி" ஒன்று; மற்றொன்று "சதி லீலாவதி." சகல அம்சங்களிலும் குற்றங் குறைகளற்றது என்று கூறுவதற்கில்லாவிடினும், இது வரை வெளிவந்த தமிழ்ப் படங்களுள் கூடியவளவு நன்றாகத் தயாரிக்கப் பட்டிருந்தது. அப் படத்தில் நடித்த நடிகர்களும் தாங்கள் பூண்ட பாத்திரங்களுக் கேற்பவே திறமையாக நடித்தனர். இதைப்

பற்றி விமர்சனம் எழுதிய ஒரு பெரிய 'கிரிடிக்கு' (இவர் ஸ்ரீமதி சுந்தராம்பாள் பக்த நந்தனாக வேடம் பூண்டதைக் குறித்து குறை கூறிப் பெருங் கிளர்ச்சி செய்தவர்.) தேசிய தினசரி யொன்றில் "நேற்று வரை தமிழ்ப் பேசும் படங்களில் "மேனகா" முதன்மை ஸ்தானம் வகித்து வந்தது. "பதி பக்தி" அதையும் ஒரு படி மீறி விட்டது" என்று மனம் விட்டு கையாகத் தேர்ந்தெடுத்தாலும், ஸ்ரீமதி எம். எஸ். விஜயாளுக்குச் சூட்டப்படும் புகழ்மாலை இவருக்கு இல்லை. இவ்வளவும் நான் எதற்காகக் கூறுகிறேனென்றால், 'கிரிடிக்கு'கள் சிலர், பாரபக்ஷத்தோடு விமரிசனம் எழுதுவதையும், வகுப்புவாதம் சினிமாக் கலையிலும் மெல்லப் புகுந்து வருவதையும் காட்டுவதற்கேயாகும். பத்திரிகைப் பிரதிநிதிகள்

வங்காளி நடிகை ஸ்ரீமதி. ஜெரீனா காதூன்.

எழுதினர். அப்படி யிருந்தும், எந்த வகையிலும், "பதி பக்தி", "மேனகா" ஆகிய படங்களுக்கு அடுத்த ஸ்தானத்தையே பெறக் கூடிய "சதி லீலாவதி" படத்துக்கே விளம்பரமும், விமர்சனமும் பலமாக இருந்தன. சென்னை சினிமா சங்கத்தார் நடத்திய தேர்தலில் பொது மக்கள் ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மிக்கே பெருவாரியாக வாக்களித்து சிறந்த நடி முதலியவர்களுக்காகக் காட்டப்படும் பிரத்தியேகக் காட்சிகளின்போது, விஜயஞ் செய்திருப்பவர்களில் ஒரு சாரிடையே நடைபெறும் சம்பாஷணைகளைக் கவனிக்க நேர்ந்ததில், சினிமாத் துறையில் 'வகுப்புவாதம்' நாளுக்கு நாள் வலுத்து வருவதை யறிந்தேன். அரசியலில், தேசியத்தில், சமய சமூகத்தில் தான் 'வகுப்புவாதம்' என்னும் தொத்து

நோய் பாவி இந்திய மக்களை முன்னேற்ற மடைய வொட்டாது அலைத்துப் படுகுழியில் ஆழ்த்தி வருகிறதென்றால், லளித கலையிலுமா—சினிமாக் கலையிலுமா இச் சனியன் பிடிக்கவேண்டும்? இவ்வகுப்பு வாதப் பேய்க்குத் தமிழ்மக்களாகிய நாம் அடிமைப்பட்டிருந்தால், எக்காலத்தில் அரசியலிலோ, கலைத்துறையிலோ பிறவற்றிலோ முன்னேற முடியும்? ஆண்டவனே! இவ் 'வகுப்புவாத'த் தொத்து நோயிலிருந்து மக்களைக் காப்பாற்ற மாட்டாயா!

* * *

வடநாட்டில் இந்து முஸ்லீம் பிணக்கிருந்தாலும், நான் அறிந்த மட்டில், சினிமாக் கலையில் இவ் வகுப்புவாதம் புகுந்திருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறிருந்தால், மேனாட்டுப் படங்களையும் விட ஒருபடி உயர்ந்து போய்விட்டதென்று கூறக் கூடிய வகையில் சிறந்து விளங்கிய "தேவதாஸ்," "சண்டிதாஸ்," "அனார்கலி," "தர்மாத்மா," "அல்லாவின் தீர்ப்பு," "டாகூ மன்சூர்" "பாக்கிய சக்ரம்" முதலிய படங்களைத் தயாரித்திருக்க முடியாது.

* * *

"பாக்கிய சக்கரம்"

இச் சிறந்த ஹிந்தி படம் சமீபத்தில் சென்னை ஸ்டார் டாக்கீஸில் நான்கு வாரங்கள் காட்டப்பட்டது. எனக்குத் தெரிந்தமட்டில் சென்னை நகரில் எந்த வடநாட்டுப் படமும் ஒன்றிரண்டு வாரங்களுக்குமேல் ஓடியதில்லை. கல்கத்தாவிலும் மற்ற மாகாணங்களிலும் பல வாரங்கள் ஓடியதாக விளம்பரஞ் செய்யப்பட்ட "சண்டிதாஸ்" கூட சென்னையில் இரண்டு வாரமே ஓடியது. அப்படி யிருக்க, இப் படம் நான்கு வாரங்கள் தொடர்ந்து

பம்பாயில் தயாராகின்றது.

என்ன?

"சத்தியசீலன்"

எங்கே?

வாடியா மூவிடோனில்.

யாரைக்கொண்டு?

M. K. தியாகராஜ பாகவதர்.
M. S. K. தேவசேனா.
M. L. நாராயண ராவ்.

திரையில் எதிர்பாருங்கள் விரைவில்.

காட்டப்படுவ தென்றால், அதில் விசேஷமில்லாதிருக்க முடியுமா! இப்படம் கதைப் போக்கு, நடிப்புத்திறமை, பாட்டு, சம்பாஷணை முதலிய சகல அம்சங்களிலும், இது வரை வெளிவந்த வடநாட்டுப் படங்கள் யாவற்றையும் மீறிவிட்ட தென்றால், அது உயர்வு நவிற்சியல்ல. அது மட்டுமல்ல; மிகச் சிறந்ததாகக் கருதப்படும் எந்த மேனாட்டுப் படத்துக்கும் இது தாழ்ந்ததல்ல எனத் துணிந்து கூறலாம். இப்படத்தில் கண்ணில்லாப் பாடகர் கே. ஸி. டே என்பவர் முக்கிய பாத்திரமெடுத்து நடிக்கிறார். ஸ்ரீமதி உமாதேவியும், ஸ்ரீ பஹாரி ஸன்யாலும் முறையே கதாநாயகி, கதாநாயகனாக நடிக்கின்றனர். நடிப்பிலோ, பாட்டிலோ ஸ்ரீமதி உமாதேவிக்கு இணையாக நிற்கக்கூடிய நடிகை நம் தமிழ்நாட்டில் யாராகிலும் இருக்கிறாரா என்று துருவித் துருவிப் பார்த்தாலும், காண முடியவில்லை. கே. ஸி. டேயும், உமாதேவியும் பாவகத்தை வெளிப்படுத்தி உணர்ச்சி ததும்ப இனிமையாகப் பாடும் பாடல்களைக் கேட்டு விட்டு, தமிழ்நாட்டுச் சங்கீத கேசரிகளும், சாரீர சம்பன்ன கோகிலங்களும் பாடும் பாடல்களைச் செவி சாய்த்துக் கேட்க விருப்பமுண்டாகுமா? இப்படத்தில் கே. ஸி. டே, வளர்ப்புப் பிள்ளையின் பிரிவுக்காக வருந்தி நடிக்குமிடத்தில் "தீபக், தீபக்" என வாய்விட்டுக் கதறுகிறார். தீபகனாக நடித்த பஹாரி ஸன்யால் தன் உணர்ச்சியை யடக்க முடியாது தானிருந்த இடத்தினின்றுந் தாவி வளர்ப்புத் தந்தையைத் தழுவிக் கொள்கிறான். இக்கட்டம் பார்ப்பவர் மனதைக் கொள்ளைகொண்டு அக்காட்சியில் அப்படியே லயிக்கச் செய்து விடுகிறது. இவ்வித உணர்ச்சியை நான் பார்த்த எந்த தமிழ்ப்படத்தின் வாயிலாகவும் அடைந்ததில்லை.

உமாதேவி, ராஜகுமாரி, சுலோசனா போன்ற நடிகைகளையும், சைகால், பிருதிவிராஜ், நவாப், பில்லிமோரியா போன்ற நடிகர்களையும் நாம் என்று பெறுவோம்!

பாதுகா பட்டாபிஷேகம்

"பாக்கிய சக்கரத்"தைக் கண்டு களித்த நான் "பாதுகா பட்டாபிஷேக"த்தையும் பார்க்க நேர்ந்தது. இந்த ராமாயண படத்தை மதுரை கிருஷ்ணா டாக்கீஸார் பூனா ஸ்டுடியோ வொன்றில் தயாரித்தனர். இதில் மஹாராஜபுரம் கிருஷ்ணமூர்த்தி, சந்தான கிருஷ்ணன், பி. பி. ரங்காச்சாரி, T. D. ருக்மணி, தேவாரம் இராஜம்மாள் முதலியோர் நடித்திருக்கின்றனர். ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி இதற்கு முன் நாலைந்து படங்களில் நடித்திருக்கிறார். இருந்தாலும், இதில் அவருக்கு வேடப் பொருத்தம் சிறிது மில்லை; நடிப்பில் அபிவிருத்தியே யில்லை. பாட்டுக் கூட ஒன்றிரண்டு பாடல்களே கேட்பதற்கு இனிமையா யிருக்கின்றன. "குயிலும் மயிலும், மடமானும்" என்ற விருத்தம் கர்ணாமிர்தமா யிருந்தது. பரதனாக நடித்த ஸ்ரீ சந்தானம் இதுவே முதன் முறையாக இருந்தும், கூடுமானவரை நன்றாக நடிக்க முயன்றிருக்கிறார். பரதன் தாய் கைகேயியைக் கோபிக்குமிடத்தில் ஸ்ரீ சந்தானம் இன்னுங் கொஞ்சந் தீவிரங் காட்டி யிருந்தாரானால், அவரது நடிப்பு சோபித்திருக்கும். தசரதராக வேடம் பூண்ட ஸ்ரீ ரங்காச்சாரியும் நடிப்பில் கவனஞ் செலுத்தி யிருக்கிறார். அவருக்குப் பாட்டு அதிகங் கொடுக்கா திருந்தால் சோகபாவகத்தை இன்னும் நன்கு வெளிப்படுத்தி நடித்திருக்கக் கூடும்.

இப் படத்தில் மிகவும் பாராட்டத் தக்கவர் கூனியாக நடித்த ஸ்ரீமதி இராஜம்மாள். இவர் 80-வயதுக்கு மேற்பட்ட தொண்டு கிழம். இருந்தாலும் இவர் பாட்டையும் ஆட்டத்தையும் என்னென்பது! பதினைந்து வயது பெண் போல் இனிமையாகப் பாடுகிறார். "அம்மா! மன்னனை நம்பினையே! மதிமோசம் போயினையே!" என்று கூறும் போதும், "பரதன் முடி சூடினால் எனக்கு முதன் மந்திரி வேலை கிடைக்கும்" என்று சந்தோஷத்தால் குதித்து பாடும் போதும் அவருக்கு வாலிபம் திரும்பி விட்டதோ என்று சந்தேகப்

படும்படியாக நன்றாக நடிக்கிறார். இவர் தேவாரம் பாடுவதில் பிரசித்தி பெற்றவர். அதனாலேயே இவருக்குத் தேவாரம் இராஜம்மாள் எனப் பெயர் வழங்குகிறது. கூனி என்ற பெயருக்கேற்ப இவர் முதுகு கூனி நடிக்காதது ஒரு பெருங் குறையாகும்.

ஸ்ரீமதி T. D. ருக்மணி கைகேயியாக நடிக்கிறார். அவருக்கு அப் பாத்திரத்திற்கேற்ற கம்பீர தோரணையில்லா விடினும், சுமாராக நடிக்கிறார். பாட்டுகளும் நன்றாகப் பாடுகிறார்.

சில்லரை வேஷத்தில் இன்னும் பல குறைகளிருக்கின்றன. மொத்தத்தில் நோக்கினால், அச் சிறு குறைகளெல்லாம் படத்தின் சிறப்புக்குப் பாதகம் விளைக்கத் தக்கதல்ல.

ஸீன் ஜோடிப்புகளும், இயற்கைக் காட்சிகளும் கண்கவர் வனப்பினவாயிருக்கின்றன. படப் பதிவும், ஒலிப் பதிவும் நன்றாக எடுக்கப் பட்டிருக்கின்றன. தமிழ்ப்பட முன்னேற்றத்துக்கு இப்படம் ஒரு அளவு கோலாகும்.

கூடிய விரைவில் வெளிவரும் நன்னாளை

: எதிர்பாருங்கள் ! :

நளாயினி

வித்வான் C. S. செல்வரத்னம் பிள்ளை, C. N. நீலாவதி

மற்றும் பல உப நடிகர்கள் ஒருங்கே நடித்தது.

கோலாப்பூர் சம்ராத் சினிடோனில் தயாராகிறது.

விவரங்களுக்கு :—

ஓரியண்டல் சௌண்ட் பிக்சர்ஸ் லிமிடெட், :: திருப்பூர்.

மதராஸ் யுனைடெட் ஆர்ட்டிஸ்ட்
கார்ப்பொரேஷன் கம்பெனியாரின்

மகத்தான படம்! எதிர்பாருங்கள்!!

பாபநாசம் சிவன் நடித்த

'பக்த-குசேலா'

(தமிழ் பேசும் படம்)

இனியகானம், பக்தி, சோகம், ஹாஸ்யம் மற்றும் எச்சுவையும் பொருந்திய அற்புத படமிதுவே!

மற்றும் பிரக்யாதிபெற்ற நடிகர்கள்.

ஸ்ரீமதி S. D. சுப்புலக்ஷிமி
S. S. மணி பாகவதர்
ஜாலி கிட்டு ஐயர்
வித்வான் சங்கரலிங்கம்
ஜி. பட்டு ஐயர்
பாலசரஸ்வதி என்னும் 7-வயது [பெண்
K. K. பார்வதி
குஞ்சிதபாதம் பிள்ளை

டைரெக்ஷன்:—K. சுப்பிரமணியம், B. A., B. L.

— உதவி டைரக்டர்:—சி. எஸ். வி. ஐயர். —

R. C. A. சௌண்டு முறையில் தயாரித்தது.

**தமிழ் புது வருஷப் பிறப்பு தினத்தன்று
தென்னிந்திய பிரபல
தியேட்டர்களில் ஆரம்பம்.**

விவரங்களுக்கு எழுதவும்:—Madras United Artistes Corporation,
தந்தி: "நவீன" 7, Bell's Road, Triplicane, Madras.